# தேர்ந்தெடுக்கப்பட்ட

# 70 நபிமொழிகள்

## பகுதி - 3

## 1435-2014

❖ அறிவிப்பாளர் பற்றி சிறுகுறிப்பு

❖ சிறு விளக்கங்களுடன்

مختارات من السنة النبوية

الجزء الثالث

لعام ١٤٣٥هـ

**போட்டி ஏற்பாடு**

**சனசமூக மற்றும் அழைப்புப் பிரிவு**

**ரப்வா இஸ்லாமிய அழைப்பு நிலையம்- ரியாத்**

**சவூதி அரேபியா**

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாலனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்

# முன்னுரை

தன் தூதரை நேரான வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும், சகல மார்க்கங்களையும் விட அதை மேலோங்கச் செய்வதற்காக அனுப்பியருளிய வல்ல இறைவனுக்கே எல்லாபுகழும்.

நபிமார்களுக்கெல்லாம் முத்திரையான எங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களது தோழர், கிளையார், மறுமை வரை அவர்களைப் பின்பற்றும் அனைவர் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்.

இஸ்லாம் ஈருலக ஈடேற்றத்திற்குரிய மார்க்கமாகும். எனவேதான் அது மக்களுக்கு தனிமனித, குடும்ப, சமூக, மார்க்க அடிப்படையிலான வாழ்கைக்கு வெற்றிப்பாதைகளை தெளிவுபடுத்துகின்றது. எனவே மனித சமூகங்களில் அநீதி, அத்துமீறல், வெறுப்பு போன்றவற்றிற்கு அது இடமளிப்பதில்லை. தற்காலத்தில் உலகை ஆட்டிப்படைக்கும் (அனைத்து) மனித சீர்கேடுகளும் தூய இஸ்லாத்தின் உயிரோட்டத்திலிருந்து

தூரமாகியதன் வெளிப்பாடுகளே. அதன் காரணமாக, கண்ணியத்திற்குரிய தூதர் முஹம்மத் பின் அப்தில்லாஹ் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இந்த மார்க்கத்தை யதார்த்தமாகப் பற்றிப்பிடிப்பதின்பால் (உங்களை) நாம் அழைக்கிறோம். (அதன் ஒரு கட்டமாக) உண்மையாகவும் உளத்தூய்மையுடனும் நபி (ஸல்) அவர்களை கண்ணியப்படுத்தி நேசிப்பதுடன் அவர்களை பின்பற்றுவதற்காக, அவருடைய தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொன்மொழிகளை உங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

(இதனை) வாசிப்பவர் 'ஸு ன்னா' என்ற சொல்லின் விளக்கம் என்ன? என்பதை அறிவது அவசியமாகும். ஸு ன்னா என்பது ஹதீஸையே குறிக்கின்றது. நபி (ஸல்) அவர்களின் சொற்கள், செயற்கள், மற்றும் அவரது (அனைத்து) நிலைகளையுமே ஹதீஸ் என்கிறோம். அல்லது நபி (ஸல்) அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் மற்றும் பண்பு ஆகயவற்றையே ஹதீஸ் என்கிறோம்.

நபிமொழிகளுக்குப் படிப்பினைகள் கூறும்போது, இஸ்லாத்திற்கு சேவை செய்த இமாம் நவவீ (ரஹ்), இமாம் இப்னு ஹஜர் (ரஹ்), போன்ற அறிஞர்களின் கூற்றுக்களிலிருந்து, இயன்றளவு அழைப்புப்பணி, அறிவியல், நடைமுறை சம்பந்தப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கும் வகையில் தொகுத்துள்ளேன். எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

இந்நபிமொழிகளின் தரங்களைப் பொறுத்தவரையில் : அந்நபிமொழி புஹாரி, முஸ்லிம் ஆகிய இரு

கிரந்தங்களிலிருந்து எடுக்கப்பட்டதாக இருந்தால் அதன் தரத்தைக் கூறத்தேவையில்லை. ஏனெனில் அவ்விரண்டிலும் இடம்பெற்றுள்ள நபிமொழிகள் ஆதாரபூர்வமானவை என்பது இச்சமூகத்தில் (எற்றுக்கொள்ளப்படும்) அனைத்து அறிஞர்களின் கருத்தாகும்.

அபூதாவூத், திர்மிதீ, நஸாஈ, இப்னுமாஜஃ போன்ற கிரந்தங்களில் இடம்பெற்றுள்ள நபிமொழியாக இருந்தால், ஹதீஸ்கலை மேதை அஷ்ஷேஹ் முஹம்மத் நாஸிருத்தீன் அல்அல்பானீ (ரஹ்) அந்நபிமொழிக்குக் கூறியுள்ள தரத்தை இங்கு நானும் கூறியுள்ளதுடன், திர்மிதீயில் இடம்பெற்றுள்ள நபிமொழிகளுக்கு இமாம் திர்மிதீயே வழங்கியுள்ள தீர்பையும் நான் இங்கு கூறியுள்ளேன். அல்லாஹ் அனைத்து அறிஞர்களுக்கும் அருள்புரிவானாக.

நான் இங்கு தொகுத்துள்ள நபிமொழிகள் பெரும்பாலும் இஸ்லாமிய அடிப்படைக் கொள்கை, சட்டதிட்டங்கள், ஒழுக்கவிழுமியங்கள் போன்ற வற்றுடன் சம்பந்தப்பட்டவையே. (ரப்வா) அழைப்புமையத்தின் 1435ம் ஆண்டிற்கான மூன்றாவது ஹதீஸ் மனனப் போட்டிக்காக, அழைப்புமையத்தின் விதிமுறைகளுக்கமைய இந்நபிமொழிகள் ஐந்து படித்தரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

இந்நூலை ஏற்றுக்கொண்டு, இதனை பரகத் செய்யப்பட்ட பயனுள்ளதாக ஆக்கும்படி வல்லஇறைவனிடம் வேண்டுகிறேன். நிச்சயமாக அவன் செவிமடுப்பவனும் பதிலளிப்பவனுமாவான்.

பின்னர் ரியாத் மாநகரத்திலுள்ள ரப்வா இஸ்லாமிய அழைப்பு நிலையத்தின் நிர்வாகத் தலைவர் அஷ்ஷேஹ் காலித் இப்னு அலீ அபல்கைல் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். அழைப்புப்பணிக்கு சகல விதத்திலும் பயன்படும் சிறந்த வழிகாட்டல்களை எமக்குத்தந்துதவும் அவருக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

அதேபோன்று இப்போட்டியை நடத்த மிகவும் ஆர்வத்துடன் மேற்பார்வை செய்த, ரியாத் மாநகரத்தின் ரப்வா அழைப்பு நிலையத்தில் சனசமூகப்பிரிவுப் பொறுப்பாளர் அஷ்ஷேஹ் நாஸிர் இப்னு முஹம்மத் அல்ஹுவைஷ் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று எனக்கு பயனளிக்கும் பல நல்ல கருத்துகள், ஆலோசனைகள் வழங்கிய இந்நிலையத்தில் பணிபுரியும் எனது சகோதர அழைப்பாளர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, அழைப்புப் பிரிவின் செயலாளர் சகோதரர் அப்துல்அஸீஸ் மஃஊப் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அல்லாஹ் அனைவருக்கும் ஈருலக நலவுகளையும் வழங்குவானாக. நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் கிளையார்கள், தோழர்கள், மறுமை வரை அவர்களின் வழியில் சென்ற அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

எழுதியவர்

கலாநிதி முஹம்மத் முர்தழா ஆஇஷ் முஹம்மத்

1435- 2- 3 (6- 12- 2013)

தமிழில்

எம் அஹ்மத் (அப்பாஸி)

**١- عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللَّهُ عَنْهُمَا قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ: "اُعْبُدُوا الرَّحْمَنَ، وَأَطْعِمُوا الطَّعَامَ، وَأَفْشُوا السَّلاَمَ؛ تَدْخُلُوا الْجَنَّةَ بِسَلاَمٍ".**

(جَامع الترمذي، رقم الحديث ١٨٥٥، قَالَ الإمام الترمذي عن هذا الحديث: بأنه حسن صحيح، وقَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(1) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நீங்கள் ரஹ்மானை வணங்குங்கள். (மக்களுக்கு) உணவளியுங்கள். ஸலாத்தைப் பரப்புங்கள். ஈடேற்றமாக சுவனம் நுழைவீர்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி).

ஆதாரம் : திர்மிதீ 1855, இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

### ஹதீஸ் அறிவிப்பாளர்:

அப்துல்லாஹ் இப்னு அம்ரு இப்னில் ஆஸ் அல்குரஷீ அஸ்ஸஹ்மீ என்ற இவர் அறியப்பட்ட சிறந்த நபித்தோழராவார். தனது தந்தைக்கு முன்னரே இவர் இஸ்லாத்தில் இணைந்து கொண்டார். இவருடைய 700 பொன்மொழிகள் நபிமொழிக்கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளன. நபியவர்களுடன் சில யுத்தங்களில் கலந்து கொண்டதுடன், அரசியல் துறையிலும், நிர்வாகத்துரையிலும் இவர்கள் பிரபலமானவராக இருந்தார்கள். இதனால் முஆவியா (ரலி) அவர்கள் தனது ஆட்சியின் போது குறிப்பட்ட காலத்திற்கு கூபா நகரத்திற்கு கவர்ணராக நியமித்தார்கள்.

எகிப்திலுள்ள ஜாமிஉல் புஸ்தாத்தில் (தற்போது அம்ரு இப்னுல் ஆஸ் பள்ளி) நபியவர்களின் பொன்மொழிகளை அறிவித்துக்கொண்டும், மார்க்கத் தீர்ப்பு வழங்கிக் கொண்டும் இருந்தார்கள். அவரிடமிருந்து எக்ப்து, ஸிரியா, ஹிஜாஸ் (தற்போதய மக்கா, மதீனா, ஜித்தா, தாஇப்) போன்ற நகரங்களிலிருந்து அதிகமானோர் கல்வி கற்றுக்கொண்டனர். ஹி. 65ல் எகிப்தில் தனது வீட்டிலே

மரணித்து அங்கேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். (இவர் மரணித்த இடம் மக்கா, ஸிரியா என வேறு இரு கருத்துக்களும் உள்ளன).

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) சுவனத்தின் வழி: அல்லாஹ்விற்கு இணைவைக்காமல் அவனை மாத்திரம் வணங்குவதும், மக்களுக்கு நலவு செய்வதுமாகும்.

(2) வணக்கத்தின் மூலம் அல்லாஹ்வை ஏகத்துவப் படுத்துவதையும், தேவையுடையோருக்கு செலவளிப்பதையும் இந்நபிமொழி தூண்டுகிறது.

(3) ஸலாமைப் பரப்புவது முஸ்லிம் சமூகத்தின் தனிநபர்களுக்கு மத்தியில் சமூக நல்லிணக்கத்தை வேரூன்றச் செய்யும் காரணங்களிலுள்ளதாகும்.

٢- عَنْ أَبِي هُرَيْرَةَ عَنِ النَّبِيِّ ﷺ أَنَّهُ كَانَ يَقُولُ إِذَا أَوَى إِلَى فِرَاشِهِ: "اَللَّهُمَّ رَبَّ السَّمَوَاتِ وَرَبَّ الأَرْضِ وَرَبَّ كُلِّ شَيْءٍ، فَالِقَ الْحَبِّ وَالنَّوَى، مُنْزِلَ التَّوْرَاةِ وَالإِنْجِيلِ وَالْقُرْآنِ الْعَظِيمِ، أَعُوذُ بِكَ مِنْ شَرِّ كُلِّ دَابَّةٍ أَنْتَ آخِذٌ بِنَاصِيَتِهَا، أَنْتَ الأَوَّلُ فَلَيْسَ قَبْلَكَ شَيْءٌ، وَأَنْتَ الآخِرُ فَلَيْسَ بَعْدَكَ شَيْءٌ، وَأَنْتَ الظَّاهِرُ فَلَيْسَ فَوْقَكَ شَيْءٌ، وَأَنْتَ الْبَاطِنُ فَلَيْسَ دُونَكَ شَيْءٌ، اقْضِ عَنِّي الدَّيْنَ وَأَغْنِنِي مِنَ الْفَقْرِ".

(سنن ابن ماجه، رقم الحديث ٣٨٧٣ ، وصحيح مسلم، رقم الحديث ٦١- (٢٧١٣)، واللفظ لابن ماجه، قال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث بأنه: صحيح).

(2) நபி (ஸல்) அவர்கள் (இரவில்) தூங்க ஆரம்பிக்கும் போது பின்வரும் துஆவை ஓதுவார்கள் : 'அல்லாஹும்ம ரப்பஸ்ஸமாவாதி வரப்பல் அர்ழி வரப்ப குல்லி ஷைஇன், பாலிகல் ஹப்பி வன்நவா, முன்ஸிலத் தௌராதி வல்இன்ஜீலி வல்குர்ஆனில் அளீம், அஊது பிக மின் ஷர்ரி குல்லி தாப்பதின் அன்த ஆகிதுன் பினாஸியதிஹா. அன்தல் அவ்வலு பலைஸ கப்லக ஷைஃ, வஅன்தல் ஆகிரு பலைஸ பஃதக ஷைஃ, வஅன்தள்ளாஹிரு பலைஸ பௌகக ஷைஃ, வஅன்தல் பாதினு பலைஸ தூனக ஷைஃ. இக்ழி அன்னியத் தைன், வஅக்னினீ மினல் பக்ர்'.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 2713, இப்னு மாஜஃ 3873.

**பொருள் :**

வானங்கள், பூமி, அனைத்து வஸ்துக்களுடையவும் இறைவனே! வித்துக்களையும் கொட்டைகளையும் (வெடித்து) முளைக்கச் செய்பவனே! தௌராத், இன்ஜீல் மற்றும் மகத்துவமிக்க அல்குர்ஆனையும் இறக்கியருளினவனே! உனது பிடியிலிருக்கும் அனைத்து ஜீவராசிகளுடைய தீங்கை விட்டும் உன்னிடமே

பாதுகாவல் தேடுகிறேன். நீயே ஆரம்பமானவன், உனக்கு முன்னர் வேறெதுவுமில்லை. நீயே இறுதியானவன், உனக்குப் பின் வேறெதுவுமில்லை. நீயே மேலானவன், உனக்கு மேலால் எந்தவொன்றுமில்லை. நீயே அடித்தளமானவன், உனக்குக் கீழே வேறொன்றுமில்லை. எனது கடனைத் தீர்த்துவைப்பாயாக. வறுமையிலிருந்து எனக்குத் தன்னிறைவு தருவாயாக.

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

'ராவியதுல் இஸ்லாம்' என்ற சிறப்புப்பெயர் பெற்றவர் அபூ ஹுரைரா அப்துர் ரஹ்மான் பின் ஸக்ர் அத்தௌஸீ அல்யமானீ (ரலி). தான் ஆடு மேய்க்கும் போது பூனைக்குட்டியுடன் விளையாடிக் கொண்டிருப்பதை வழமையாகிக் கொண்டதால் இவருக்கு 'அபூ ஹுரைரா' என்ற புனைப்பெயர் சூட்டப்பட்டது. 'கைபர்' போர் நடைபெற்ற ஹிஜ்ரி 7ம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றார். பின்னர் தொடர்ந்து 4 வருடங்கள் நபிகளாருடனே இருந்தார்கள், நபியவர்கள் எங்கிருந்தாலும் அவர்களுடனேயே இருந்து நபிமொழிகளைக் கற்பதில் முயற்சி எடுத்து அதில் ஆர்வம் காட்டினார்கள். இதனால் நபிகளாரைத் தொட்டும் அதிக நபிமொழிகளை மனனமிட்டு, 5374 ஹதீஸ்களை அறிவித்து, நபித்தோழர்களில் மிகக் கூடுதலான நபிமொழிகளை அறிவித்தவர் என்ற பெயருக்கு சொந்தமானார். மேலும் மதீனாவின் பிரபல மார்க்க சட்டக்கலை வல்லுனர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். ஹிஜ்ரி 57ம் ஆண்டு மதீனாவில் மரித்து பகீஉல் கர்கதில் அடக்கம் செய்யப்பட்டார்.

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) அல்லாஹ்தான் ஆரம்பமானவன், இறுதியானவன், மேலானவன், அடித்தளமானவன் என்று விசுவாசிப்பது கடமையாகும்.

இந்நபிமொழியில் :

- ஆரம்பமானவன் என்பதன் விளக்கம் : அவன் எந்த ஆரம்பமுமற்ற ஆதியானவன். அவனை எந்தவொன்றும் முந்தவில்லை. அவனைத் தவிர எதுவும் இல்லாத நிலையில் அல்லாஹ் இருந்தான்.
- இறுதியானவன் என்பதன் விளக்கம் : அவன் நிலையாக இருக்கும் போதே எல்லாப் பொருட்களும் அழிந்து விடும். அவனுக்குப் பின் எந்தவொன்றும் இருக்கமாட்டாது.
- மேலானவன் என்பதன் விளக்கம்: அனைத்தையும் விட மேலோங்கியவன், உயர்ந்தவன். அவனை விட உயர்ந்தது ஏதும் கிடையாது.

அடித்தளமானவன் என்பதன் விளக்கம் : அல்லாஹ் அன்றி (கருமங்களை) நிர்வகிப்பவன் யாருமில்லை. எந்தப் பொருளையும் தனியாக்கிக் கொள்பவன் அவனைத்தவிர யாருமில்லை. யாரும் அவனை விட்டும் மறைய முடியாது. அவன் அனைத்தையும் அறிந்தவன்.

(2) அல்லாஹ்வுடைய பண்புகளை மார்க்க மூலாதாரங்களில் (அல்குர்ஆன், ஹதீஸ்)

வந்திருப்பது போன்றே (மாற்றாமல், மறுக்காமல், உவமைப் படுத்தாமல், வடிவம் கொடுக்காமல் ஏற்றுக்கொண்டு) தரிபடுத்த வேண்டும். தெளிவுபடுத்தும் நோக்கில் அதன் பாருளை அரபி அல்லாத மொழிகளில் விளக்குவதில் தடையில்லை.

(3) இப்பிரார்த்தனையை மனனமிட்டு தூங்கமுன் ஓத வேண்டும்.

(4) அனைத்து அகிலங்களையும் படைத்துப் பரிபாளிப்பவன் அல்லாஹ்தான். அவனே அனைத்துப் படைப்பினங்களினதும் நாயன். என்பதற்கு இந்நபிமொழியும் சான்றாகவுள்ளது.

**٣- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ أَنَّ رَسُوْلَ اللّٰهِ ﷺ قَالَ: "أَقْرَبُ مَا يَكُوْنُ الْعَبْدُ مِن رَّبِهِ وَهُوَ سَاجِدٌ؛ فَأَكْثِرُوا الدُّعَاءَ".**

(صحيح مسلم، رقم الحديث ٢١٥ - (٤٨٢)، ).

(3) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஓர் அடியான் தனது இறைவனுக்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் சந்தர்ப்பம் அவன் ஸுஜூதிலிருக்கும் போதுதான். எனவே (அதில்) பிரார்த்தனையை அதிகரித்துக்கொள்ளுங்கள்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 482.

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) ஸு ஜூ தில் அதிகம் பிரார்த்திப்பதை இந்நபிமொழி தூண்டுகிறது.

(2) தொழுகை ஸு ஜூ தை உள்ளடக்கியுள்ளதால் அது அல்லாஹ்வை நெருங்கும் வழிகளிலுள்ளதாகும்.

(3) அல்குர்ஆன், ஹதீஸில் வந்த பிரார்த்தனைகளைக் கேட்பதில் ஆர்வங் கொள்ள வேண்டும்.

**٤- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ: "مَنْ لاَ يَشْكُرِ النَّاسَ، لاَ يَشْكُرِ اللهَ".**

(جامع الترمذي، رقم الحديث ١٩٥٤، وسنن أبي داود، رقم الحديث ٤٨١١، واللفظ للترمذي، قَالَ الإمام الترمذي عن هذا الحديث: بأنه حسن صحيح، وقال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(4) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மக்களுக்கு நன்றி செலுத்தாதவர் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தமாட்டார்.

அறிவிப்பவர் : அபூ ஹு ரைரா (ரலி).

ஆதாரம் : அபூ தாவூத் 4811, திர்மிதீ 1954, (இவ்வார்த்தை திர்மிதீயிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும்

தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

(3ம் 4ம் நபிமொழிகளின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது. )

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) மக்கள் (எங்களுக்குச் செய்யும்) உபகாரங்களுக்காக அவர்களுக்கு நன்றி செலுத்துவதை இந்நபிமொழி தூண்டுகிறது.

(2) மக்களுக்கு நன்றி செலுத்தாதவர்களை இந்நபிமொழி கண்டிக்கின்றது.

(3) மக்களுக்கு நன்றி செலுத்துவதை விட்டவன், அல்லாஹ் அவனுக்குச் செய்த உபகாரங்களுக்காக செய்யும் நன்றியை அவன் ஏற்றுக்கொள்ள மாட்டான்.

(4) நல்ல பிரார்த்தனை, புகழ், நல்ல வார்த்தை, நன்னடத்தை ஆகியவற்றை மக்களுக்குச் செய்வது அவர்களுக்கு நன்றி செலுத்தும் வழிகளிலுள்ளதாகும்.

٥- عَنْ أَبِيْ سَعِيْدٍ اَلْخُدْرِيِّ ﷺ أَنَّ رَسُوْلَ اللّٰهِ ﷺ قَالَ: "مَنْ قَالَ: رَضِيْتُ بِاللّٰهِ رَبًّا وَبِالإِسْلاَمِ دِيْنًا وَبِمُحَمَّدٍ رَسُوْلاً، وَجَبَتْ لَهُ الْجَنَّةُ.

(سنن أبي داود ، رقم الحديث ١٥٢٩ ، وقَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(5) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் 'ரழீது பில்லாஹி ரப்பன், வபில் இஸ்லாமி தீனன், வபி முஹம்மதின் ரஸூலா' என்று கூறுகிறாரோ அவருக்கு சுவனம் விதியாகிவிட்டது.

அறிவிப்பவர் : அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி).

ஆதாரம் : அபூ தாவூத் 1529. அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**பொருள் :**

அல்லாஹ்வை இறைவனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மதை (ஸல்) தூதராகவும் பொருந்திக் கொண்டேன்.

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அபூ ஸஈத் அல்குத்ரீ என்ற (புனைப்பெயருள்ள) இவரின் பெயர் ஸஃத் இப்னு மாலிக் இப்னி ஸினான் அல் அன்ஸாரீ அல்கஸ்ரஜீ என்பதாகும். இவர் நபித்தோழர்களில் அறியப்பட்டவராகவும், சிறந்த அறிஞர்களிலொருவராகவும் உள்ளார். இவர் கலந்துகொண்ட முதல் யுத்தம் கன்தக் ஆகும்.

நபியவர்களுடன் 12 யுத்தங்களில் கலந்து கொண்ட இவர்கள் நபி (ஸல்) அவர்களிடமிருந்து அறிவித்த 1170 பொன்மொழிகள் நபிமொழிக்கிரந்தங்களில் கூறப்பட்டுள்ளன. தனது 86வது வயதில் ஹி. 74ல் மதீனாவில் மரித்து பகீஇல் அடக்கம் செய்யப்பட்டார்கள். (இவரது மரணத்திகதி பற்றி) வேறு கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன. இறைவனே மிக்க அறிந்தவன்.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) மேற்கண்ட பிரார்த்தனையை தொடர்ந்து ஓதுவதை இந்நபிமொழி தூண்டுகின்றது.

(2) அல்லாஹ்வை இறைவனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மதை (ஸல்) தூதராகவும் பொருந்திக் கொள்வது (மறுமையில்) வெற்றிபெற விரும்பும் அனைவருக்கும் கடமையாகும்.

(3) மேற்கண்ட பிரார்த்தனையின் சிறப்பை இந்நபிமொழி எடுத்துக்காட்டுகின்றது. ஏனெனில், அல்லாஹ்வை ஏகத்துவப்படுத்தி அவன் மீது (எமது) பொறுப்புக்களைச் சாட்டுவதையும், அவனுடைய இஸ்லாமிய மார்க்க அறிவுரைகளுக்குக் கட்டுப்படுவதையும், இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதாக ஏற்றுக் கொள்வதையும் இந்நபிமொழி உள்ளடக்குகின்றது.

٦- عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللَّهِ ﷺ: "إِنَّ اللَّهَ لَيَرْضَى عَنِ الْعَبْدِ أَنْ يَأْكُلَ الْأَكْلَةَ؛ فَيَحْمَدَهُ عَلَيْهَا ، أَوْ يَشْرَبَ الشَّرْبَةَ؛ فَيَحْمَدَهُ عَلَيْهَا".

(صحيح مسلم، رقم الحديث ٨٩- (٢٧٣٤)، ).

(6) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உணவு உட்கொண்ட பின் அதற்காக அல்லாஹ்வைப் புகழ்வதையும், பாணங்கள் அருந்திவிட்டு அதற்காக அவனைப் புகழ்வதையும், நிச்சயமாக அல்லாஹ் ஓர் அடியானிடத்திலிருந்து பொருந்திக் கொள்கின்றான்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 2734.

## 🖉ஹதீஸ் அறிவிப்பாளர்:

அபூ ஹம்ஸா என்ற புனைப்பெயருள்ள அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் நபிகளாரின் பணியாளர் என்று அழைக்கப்பட்டார். ஹிஜ்ரத் நடைபெற 10 வருடங்களுக்கு முன்னர் மதீனாவில் பிறந்த இவர் சிறு வயதிலேயே இஸ்லாத்தை ஏற்றார். பின்பு நபிகளாருடன் சேர்ந்து 10 வருடங்கள் அவர்களுக்கு சேவை புரிந்து, நபியவர்கள் மரணிக்கும் வரை கூடவே இருந்தார்கள். பின்பு திமஷ்க் (ஸிரியா) நகரத்திற்குச் சென்று, அங்கிருந்து பஸரா

நோக்கிச் சென்றார்கள். நபிகளாரைத் தொட்டும் 2286 ஹதீஸ்களை அறிவித்ததன் மூலம் அதிக நபிமொழிகளை அறிவித்தவர்களில் ஒருவரானார். தனது 100வது வயதைத் தாண்டிய பின்னர் ஹிஜ்ரி 93ம் ஆண்டு பஸ்ராவில் காலமானார்.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) அல்லாஹ் அருளியுள்ள உணவு, பாணங்களின் அருட்கொடைகளை ஏற்றுக்கொண்டு, அதற்காக அவனைப் புகழ்வது முஸ்லிமுக்குக் கடமையாகும். ஏனெனில் அவனே இவனுக்கு இந்த உணவு, பாணங்களை இலகுவாக்கிக் கொடுத்தான்.

(2) அல்லாஹ்வின் பொருத்தத்தை அடைய விரும்புவோர் அவனுடைய அருட்கொடைகளுக்காக அவனுக்கு நன்றி செலுத்துவது அவசியமாகும்.

(3) உணவு, பாணங்களை உட்கொண்ட பின் ஒரு முஸ்லிம் பின்வரும் துஆக்களில் ஒன்றை ஓத வேண்டும்:

- ‘அல்ஹம்து லில்லாஹி கஸீரன் தைய்யிபன் முபாரகன் பீஃஹி, கைர மக்பிஃய்யின் வலா முவத்தஃஇன் வலா முஸ்தக்ஃனன் அன்ஹு ரப்பனா’. (புகாரி 5458)

பொருள் : அதிகமான, தூய்மையான, வளமிக்க எல்லாப் புகழும் (நன்றியும்) அல்லாஹ்வுக்கே உரியது. இறைவா!

இப்புகழ் முற்றுப் பெறாதது கைவிடப்படக் கூடாதது தவிர்க்க முடியாதது ஆகும்.

- ‘அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்அம வஸகா, வஸவ்வக:ஹூ வஜஅல லஹூ மக:ரஜா’. (அபூ தாவூத் 3851. அஷ்ஷேஹ் அல்பானீ (ரஹ்) இந்நபிமொழி ஸஹீஹ் எனக் கூறியுள்ளார்கள்.)

பொருள் : (எனக்கு) உணவளித்து, நீர் புகட்டி, அவற்றை இலகுவாக்கி (அவை சமிபாட்டின் பின் வெளியேற) அதற்கு வெளியேறும் வழி செய்து கொடுத்த அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்.

٧- عَنْ أَبيْ هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ ﷺ: "لاَ تَحْلِفُوْا بِآبَائِكُمْ وَلاَ بِأُمَّهَاتِكُمْ وَلاَ بِالْأَنْدَادِ، وَلاَ تَحلِفُوْا إلاَّ بِاللّٰهِ، وَلاَ تَحلِفُوْا بِاللّٰهِ إلاَّ وَأَنْتُمْ صَادِقُوْنَ".

(سنن أبي داود، رقم الحديث ٣٢٤٨، وسنن النسائي، رقم الحديث ٣٧٦٩، واللفظ لأبي داود، قَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(7) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நீங்கள் உங்கள் தாய், தந்தையரைக் கொண்டோ, சிலைகளைக் கொண்டோ சத்தியம் செய்யாதீர். அல்லாஹ்வைக்

கொண்டேயன்றி சத்தியம் செய்யாதீர். நீங்கள் உண்மையாளராகவேயன்றி அல்லாஹ்வைக் கொண்டு சத்தியம் செய்யாதீர்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : அபூ தாவூத் 3248, நஸாஈ 3769, (இவ்வார்த்தை அபூதாவூதிலிருந்து). அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) இணைவைப்பின் அசுத்தங்கள் கலக்காத தூய்மையான ஏகத்துவக் கொள்கையைப் பாதுகாக்க இந்நபிமொழி தூண்டுகிறது.

(2) அல்லாஹ் அல்லாதோரின் மீது சத்தியம் செய்தல், பொய்ச்சத்தியம் ஆகியவற்றிலிருந்து விடுக்கப்படும் எச்சரிக்கையை இந்நபிமொழி உள்ளடக்கியுள்ளது.

(3) ஒரு மனிதன் தனது அனைத்து நிலைகள், செயற்பாடுகளிலும் அல்லாஹ்வுடன் உண்மையாளனாக இருத்தல் அவசியமாகும்.

٨- عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ: "اَلدُّعَاءُ لاَ يُرَدُّ بَيْنَ الْأَذَانِ وَالْإِقَامَةِ".

(جامع الترمذي، رقم الحديث ٢١٢ ، سنن أبي داود ، رقم الحديث ٥٢١ ، واللفظ للترمذي، قال الإمام الترمذي عن هذا الحديث: بأنه حسن صحيح، وقال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(8) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அதானுக்கும் இகாமத்திற்கும் இடையில் கேட்கப்படும் பிரார்த்தனை தட்டப்படமாட்டாது.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : அபூ தாவூத் 521, திர்மிதீ 212, (இவ்வார்த்தை திர்மிதீயிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 6ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது. )

## ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) அதானுக்கும் இகாமத்திற்கும் இடையில் பிரார்த்திப்பதை இந்நபிமொழி தூண்டுகின்றது.

(2) இவ்வேளையில் பிரார்த்திப்பதில் ஆர்வம் செலுத்த வேண்டும்.

(3) பிரார்த்தனையின் ஒழுக்கங்கள், சட்டதிட்டங்கள், தேற்றங்களைப் பேணி இவ்வேளையில் பிரார்த்தித்தால் அது பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**٩- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ، قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ ﷺ: "إِنَّ اللّٰهَ يَغَارُ، وَإِنَّ الْمُؤْمِنَ يَغَارُ، وَغَيْرَةُ اللّٰهِ أَنْ يَأْتِيَ الْمُؤْمِنُ مَا حَرَّمَ عَلَيْهِ".**

(صحيح مسلم، رقم الحديث ٣٦- (٢٧٦١)، وصحيح البخاري، رقم الحديث ٥٢٢٣، واللفظ لمسلم).

(9) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நிச்சயமாக அல்லாஹ் ரோசம் கொள்கிறான். நிச்சயமாக இறைவிசுவசியும் ரோசம் கொள்கிறான். அல்லாஹ்வின் ரோசம் என்பது, அவன் தடைவிதித்துள்ள ஒன்றை (தடையை மீறி) இறைநம்பிக்கையாளர் செய்வதுதான்.

அறிவிப்பவர் : அபூ ஹு ரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 5223, முஸ்லிம் 2761. (இவ்வார்த்தை முஸ்லிமிலிருந்து)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) ரோசம் என்பது அல்லாஹ்வுடைய செயல் ரீதியான பண்புகளில் ஒன்று. அவனுடைய தகுதிக்கும்

வல்லமைக்கும் ஏற்றவாறு அவனிடத்தில் அப்பண்பு உள்ளது.

(2) அல்லாஹ்வுடைய ரோசம் என்பது அவனுடைய தடைகள் மீறப்படும்போது கடுங்கோபத்துடன் கடுமையாக அதனை வெறுப்பதாகும்.

(3) மனிதனுடைய ரோசம் என்பது தனக்கு சொந்தமான ஒன்றில் இன்னொருவர் பங்குபோட எத்தனிக்கும் போது ஏற்படும் கோபநிலையாகும்.

(4) அல்லாஹ்வும் ரோசம் கொள்கிறான். மனிதனும் ரோசம் கொள்கிறான். எனினும் மனிதனுடைய ரோசம் அல்லாஹ்வுடைய ரோசத்தைப் போன்றல்ல. அல்லாஹ்வுடைய ரோசம் கடுமையானது, மகத்தானது.

١٠- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ قَالَ: سُئِلَ رَسُوْلُ اللهِ ﷺ عَنْ أَكْثَرِ مَا يُدْخِلُ النَاسَ الْجَنَّةَ؛ فَقَالَ: "تَقْوَى اللهِ، وَحُسْنُ الْخُلُقِ"، وَسُئِلَ عَنْ أَكْثَرِ مَا يُدْخِلُ النَاسَ اَلنَّارَ؛ فَقَالَ: "الْفَمُ، وَالْفَرْجُ".

(جامع الترمذي، رقم الحديث ٢٠٠٤ ، وسنن ابن ماجه، رقم الحديث ٤٢٤٦ ، واللفظ للترمذي، قَالَ الإمام الترمذي: عن هذا الحديث بأنه: صحيح غريب، وقَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه حسن ).

(10) மக்களை அதிகம் சுவனத்தில் நுழைவிக்கும் காரியம் எது? என நபியவர்களிடம் வினவப்பட்டது. இறையச்சமும் நற்குணமும் என்றார்கள். மக்களை அதிகம் நரகத்தில் நுழைவிக்கும் காரியம் எது? என வினவப்பட்டது. வாயும் அபமும் என பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : திர்மிதீ 2004, இப்னு மாஜாஃ 4246, (இவ்வார்த்தை திர்மிதீயிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஸஹீஹ் கரீப் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஹஸன் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

(9ம் 10ம் நபிமொழிகளின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) இறையச்சமும் நற்குணமும் ஈருலக வெற்றியின் அடிப்படையாகும். ஏனெனில் இறையச்சம் என்பது படைத்தவனுடன் அழகிய முறையில் நடந்துகொள்வதாகும். நற்குணம் என்பது படைப்பினங்களுடன் அழகிய முறையில் நடந்துகொள்வதாகும்.

(2) சுவனம் என்பது மறுமையில் முஸ்லிமான ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கப்படும் இன்பங்கள் நிறைந்த வீடாகும்.

(3) வாய், அபம் ஆகியவற்றின் ஆசைகளை இஸ்லாமிய ஒளியின்றிப் பின்பற்றுவது ஈருலகத் தோல்வியின் அடிப்படையாகும்.

(4) வாய், அபம் ஆகியவற்றை தடைசெய்யப்பட்டவற்றிலிருந்து பாதுகாப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

**١١- عَنْ أَنَسٍ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ ﷺ: "مِنْ أَشْرَاطِ السَّاعَةِ: أَنْ يُرْفَعَ الْعِلْمُ، وَيَثْبُتَ الْجَهْلُ، وَيُشْرَبَ الْخَمْرُ، وَيَظْهَرَ الزِّنَى".**

(صحيح البخاري، رقم الحديث ٨٠، وصحيح مسلم، رقم الحديث ٨ – (٢٦٧١)، واللفظ للبخاري).

(11) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :‘கல்வி மக்களிடமிருந்து மறைந்து விடுவதும் அறியாமை

நிலைத்து விடுவதும் மது அருந்தப் படுவதும் வெளிப்படையாய் விபசாரம் நடப்பதும் மறுமை நாளின் அடையாளங்களில் சிலவாகும்'.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 5223, முஸ்லிம் 2671. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து)

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 6ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது. )

## ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) மார்க்க அறிவைப் பரவச் செய்து, அறியாமை மற்றும் அதன் காரணங்களை நீக்க இஸ்லாம் ஆர்வமூட்டுகின்றது. ஏனெனில் இஸ்லாம், அதன் அறிவுரைகளைப் பரவச் செய்து அதன்பால் அழைப்புவிடுக்காமல் நிலைபெற மாட்டாது.

(2) மார்க்க, சமூக மற்றும் நற்குண ரீதியில் பெரிய குழப்பங்கள் பரவுவது உலகம் சீர்கெட்டு அழிவதற்கான காரணங்களிலுள்ளதாகும்.

(3) மார்க்க அறிவையும் அதனைக் கற்றோரையும் கண்ணியப்படுத்துவது அவசியமாகும். ஏனெனில் உலகம் சீராக நிலைத்திருப்பது மார்க்க அறிவும் அதனைக் கற்றவர்களும் நிலைத்திருப்பதிலேயே தங்கியுள்ளது.

١٢- عَنْ عُقْبَةَ بْنِ عَامِرٍ ﷺ أَنَّ رَسُوْلَ اللّٰهِ ﷺ قَالَ: "إِيَّاكُمْ وَالدُّخُوْلَ عَلَى النِّسَاءِ؛ فَقَالَ رَجُلٌ مِنَ الْأَنْصَارِ: يَا رَسُوْلَ اللّٰهِ! أَفَرَأَيْتَ الْحَمْوَ؟ قَالَ: " اَلْحَمْوُ: اَلْمَوْتُ".

(صحيح البخاري، رقم الحديث ٥٢٣٢، وأيضاً: صحيح مسلم، رقم الحديث ٢٠- (٢١٧٢)، ).

(12) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ‘(அந்நியப்) பெண்கள் இருக்குமிடத்திற்குச் செல்ல வேண்டாம் என உங்களை எச்சரிக்கிறேன்’. அப்போது அன்சாரிகளில் ஒருவர், இறைத்தூதர் அவர்களே! கணவருடைய (சகோதரன் போன்ற) உறவினர்கள் (அவள் இருக்கும் இடத்திற்குச் செல்வது) குறித்து தாங்கள் என்ன கூறுகிறீர்கள்? என்று கேட்டார். நபி(ஸல்) அவர்கள், ‘கணவருடைய (சகோதரன் போன்ற) உறவினர்கள் மரணத்திற்கு நிகரானவர்கள்’ என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : உக்பா பின் ஆமிர் (ரலி).

ஆதாரம் : புஹாரி 5232, முஸ்லிம் 2172.

**☞அறிவிப்பாளர் பற்றி :**

உக்பா பின் ஆமிர் பின் அபஸ் அல்ஜு ஹனீ (ரலி) என்பவர் பிரபலமான நபித்தோழராவார். இவர் அல்குர்ஆனை சிறப்புர ஓதக்கூடிய காரியாகவும், மார்க்க சட்டக்கலை வல்லுனராகவும், சொத்துரிமைக் கலையில்

தேர்ந்தவராகவும், கவிஞராகவும், மொழிவல்லுனராகவும் இருந்ததுடன், இஸ்லாமியப் படைத் தளபதிகளில் ஒருவராகவும் திகழ்ந்தார்.

உக்பா (ரலி) அல்குர்ஆனை அழகிய முறையில் ஓதக்கூடியவராக இருந்தார்கள். அவரது ஓதலை நபித்தோழர்களில் பலர் செவிமடுத்து, அல்லாஹ்வின் அச்சத்தினால் அவர்களது உள்ளங்கள் அஞ்சி, கண்கள் கண்ணீர் வடிக்கக்கூடியவர்களாக இருந்தார்கள். நபியவர்களுடன் உஹது மற்றும் அதன்பின் நடைபெற்ற யுத்தங்களில் கலந்து கொண்டார்கள்.

இவர் எகிப்தை வெற்றிகொண்ட இஸ்லாமியப் படைத்தளபதிகளில் ஒருவராக இருந்தார். அதற்கு வெகுமதியாக அமீருல் முஃமினீன் முஆவியா (ரலி) அவர்கள் உக்பாவை எகிப்துக்கு கவர்ணராக 3 ஆண்டுகளுக்கு நியமித்தார்கள். பின்பு மத்தியதரைக் கடலிலுள்ள ருடோஸ் என்ற தீவைக் கைப்பற்ற அனுப்பினார்கள்.

நபியவர்களைத் தொட்டும் இவர்கள் அறிவித்த பொன்மொழிகள் 55 ஆகும். ஹிஜ்ரி 58ம் ஆண்டு மரணித்து கைரோவில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) இஸ்லாம் அன்னியப் பெண்ணுடன் தனித்திருப்பதைத் தடை செய்கின்றது. மஹ்ரமிய்யத்தான பெண்களுடன் அதை அனுமதிக்கின்றது. 'மஹ்ரம்' என்பது மார்க்க சட்டங்களின் அடிப்படையில் திருமணம் செய்ய என்றுமே அனுமதிக்கப்படாதவர்கள். (தாய், சகோதரி, புதல்வி போன்றவர்கள்)

(2) இஸ்லாம் குடும்பப் பரிசுத்தத்தைப் பேணுமாறு ஆர்வமூட்டுகின்றது. நற்குணம், பாதுகாப்பு, சந்தோசம் குடும்பத்தில் மேலோங்கிடவும், நோய்கள், பிணக்கு, கொலை, அழிவுக்குக் காரணமான தடை செய்யப்பட்ட கெட்ட உறவுகள் அத்தூய்மையைக் கெடுத்துவிடாமலிருக்கவும் (குடும்பப் பரிசுத்தத்தைப் பேணுமாறு ஆர்வமூட்டுகின்றது).

(3) நபிமொழியில் இடம்பெற்றுள்ள 'அல்ஹம்வு' என்பதன் விளக்கம்: கணவருடைய தந்தை பாட்டனார்கள், அவரது பிள்ளைகள் தவிர்ந்த ஏனைய உறவினர்கள். உதாரணமாக: அவருடைய சகோதரர்கள் அவர்களின் புதல்வர்கள், சிற்றப்பா, பெரியப்பாக்கள், அவர்களின் புதல்வர்கள் போன்ற திருமணம் செய்ய விலக்கப்படாதவர்கள்.

١٣- عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ: "مَنْ سَأَلَ اللَّهَ الْجَنَّةَ ثَلاَثَ مَرَّاتٍ، قَالَتِ الْجَنَّةُ: اَللَّهُمَّ أَدْخِلْهُ الْجَنَّةَ، وَمَنِ اسْتَجَارَ مِنَ النَّارِ ثَلاَثَ مَرَّاتٍ، قَالَتِ النَّارُ: اَللَّهُمَّ أَجِرْهُ مِنَ النَّارِ".

(سنن النسائي، رقم الحديث ٥٥٢١، وأيضا: سنن ابن ماجه، رقم الحديث ٤٣٤٠، وقَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(13) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் அல்லாஹ்விடத்தில் மூன்று தடவை சுவனத்தைக் கேட்கிறாரோ, (அவரைப் பார்த்து) 'இறைவா இவரை சுவனத்தில் நுழையவைப்பாயாக' என்று சுவனம் கூறும். மேலும் யார் மூன்று தடவை நரகை விட்டும் (அல்லாஹ்விடத்தில்) பாதுகாவல் தேடுகிறாரோ, (அவரைப் பார்த்து) 'இறைவா இவரை நரகத்தை விட்டும் பாதுகாத்துவிடுவாயாக' என்று நரகம் கூறும்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : நஸாஈ 5521, இப்னு மாஜா: 4340. அஷ்ஷைஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

☞ **ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) அதிகமாக சுவனத்தைக் கேட்பதையும், நரகை விட்டும் பாதுகாப்புத் தேடுவதையும் இந்நபிமொழி தூண்டுகின்றது.

(2) இறுதிநாள், சுவனம், நரகம் பற்றிய அடிப்படைக் கொள்கையை விசுவாசிப்பது முஸ்லிமுக்குக் கடமையாகும்.

(3) சுவனத்தில் நுழையவும், நரகை விட்டும் பாதுகாப்புப் பெறவும் இஸ்லாமியப் போதனைகளை உள்ரங்கமாகவும் வெளிரங்கமாகவும் அமுல்படுத்துவதை வேண்டுகின்றது.

**١٤- عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: "مَا مِنْ مُسْلِمٍ غَرَسَ غَرْسًا؛ فَأَكَلَ مِنْهُ إِنْسَانٌ أَوْ دَابَّةٌ، إِلاَّ كَانَ لَهُ صَدَقَةٌ".**

(صحيح البخاري، رقم الحديث ٦٠١٢، وصحيح مسلم، رقم الحديث ١٢ – (١٥٥٣)، واللفظ للبخاري).

(14) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒரு முஸ்லிம் மரம் ஒன்றை நட்டு அதிலிருந்து ஒரு மனிதனோ அல்லது (மற்ற) உயிரினமோ உண்டால் (அதன் காரணத்தால்) ஒரு தர்மம் செய்ததற்கான பிரதிபலன் அவருக்குக் கிடைக்காமல் இருப்பதில்லை.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : புஹாரி 6012, முஸ்லிம் 1553. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(13ம் 14ம் நபிமொழிகளின் அறிவிப்பாளர் பற்றி 6ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) விவசாயம் மற்றும் பயிர்ச்செய்கையின் சிறப்பை இந்நபிமொழி சுட்டிக்காட்டுகின்றது.

(2) விவசாய உற்பத்திகளின்றி இவ்வுலகில் மனிதனுக்கு வாழ முடியாது.

(3) விவசாயம் செய்தல், பயிர் நடுதல் ஆகியவற்றில் பெரும் கரிசனை எடுப்பது மனதினுக்கு அவசியமாகும். வளமான பூமியை பயிர்செய்யாமல் விடக்கூடாது. ஏனெனில் பழவகைகள், தானியங்கள், கீரை வகைகள், மூலிகைகள் போன்றவற்றின் அடித்தளமே இந்தப் பூமிதான்.

**١٥- عَنْ أَبِيْ مَسْعُوْدٍ اَلْبَدْرِيْ ﷺ، قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ ﷺ: "لا تُجزِئُ صَلَاةُ الرَّجُلِ، حَتَّى يُقِيْمَ ظَهْرَهُ فِي الرُّكُوْعِ وَالسُّجُوْدِ".**

(سنن أبي داود، رقم الحديث ٨٥٥، وجامع الترمذي، رقم الحديث ٢٦٥، واللفظ لأبي داود، قَالَ الإمام الترمذي عن هذا الحديث بأنه: حسن

صحيح، وقَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح ).

(15) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (தொழுகையில்) ருகூஃ, ஸுஜூதில் தனது முதுகை நிலையாக வைக்கும்வரை ஒரு மனிதனின் தொழுகை செல்லுபடியாக மாட்டாது.

அறிவிப்பவர் : அபூ மஸ்ஊத் அல்பத்ரீ (ரலி).

ஆதாரம் : அபூ தாவூத் 855, திர்மிதீ 265, (இவ்வார்த்தை அபூதாவூதிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**☞அறிவிப்பாளர் பற்றி :**

அபூ மஸ்ஊத் என்ற புனைப்பெயருடைய உக்பா பின் அம்ரு அல் அன்ஸாரீ என்பவர் ஒரு பிரபலமான நபித்தோழராவார். நபி (ஸல்) அவர்களுக்கும் மதீனாவாசிகளுக்கும் இடையில் நடைபெற்ற 2ம் உடன்படிக்கையில் கலந்துகொண்டார்கள். அப்போது அக்கூட்டத்தில் மிகச்சிறிய வயதினராக இருந்தார். உஹுத் மற்றும் அதன் பின் நடந்த அனைத்துப்

போர்களிலும் நபியவர்களுடன் கலந்து கொண்டார்கள். பின்பு கூபா சென்று அங்கு ஒரு வீட்டைக் கட்டிக்கொண்டார்கள். அலீ (ரலி) அவர்கள் ஸிப்ஃபீன் போருக்குப் புறப்படும் போது கூபாவிற்கு இவர்களை பிரதிநிதியாக நியமித்துச் சென்றார்கள். நபியவர்களைத் தொட்டும் இவர்கள் அறிவித்த பொன்மொழிகள் 102 ஆகும். ஹிஜ்ரி 41ல் மதீனாவில் மரணித்தார்கள். (வேறு சில கருத்துக்களும் இதில் கூறப்பட்டுள்ளன.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) தொழுகையில் உள்ளச்சம், நடுநிலை, அமைதி ஆகியவற்றைக் கவனித்து அதனை கண்ணியப்படுத்துவது ஒரு முஸ்லிமின் கடமையாகும்.

(2) தொழுகை தவறில்லாத சரியானதாக அமைய அதன் சட்டதிட்டங்களைப் படிப்பது ஒரு முஸ்லிமுக்கு அவசியமாகும்.

(3) தொழுகையில் அலாதியான கவனமெடுத்து அதை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் காட்டித் தந்த பிரகாரம் நிறைவேற்றுவது ஒரு முஸ்லிமின் கடமையாகும்.

١٦- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: "إِنَّ اللّٰهَ تَجَاوَزَ عَنْ أُمَّتِيْ مَا حَدَّثَتْ بِهِ أَنْفُسَهَا ، مَا لَمْ تَعْمَلْ أَوْ تَتَكَلَّمْ".

(صحيح البخاري، رقم الحديث ٥٢٦٩، وصحيح مسلم، رقم الحديث ٢٠١- (١٢٧)، واللفظ للبخاري).

(16) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : 'என் சமுதாயத்தாரின் உள்ளங்களில் எழும் தீய எண்ணங்களை அவர்கள் அதன் படி செயற்படாத வரை அல்லது அதை (வெளிப்படுத்திப்) பேசாத வரை அல்லாஹ் மன்னித்துவிட்டான்'.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 5269, முஸ்லிம் 127. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) அல்லாஹ் தனது நல்லடியார்களுக்கு நலவு செய்துள்ளான். எனவேதான் அவர்களுடைய உள்ளங்களில் இயற்கையாக ஏற்படும் கெட்ட ஊசலாட்டங்களை அமுல்படுத்தாமலும் அமுல்படுத்த எண்ணாமலும் இருக்கும் பட்சத்தில் மன்னித்துவிட்டான்.

(2) யார் பாவத்தை செய்ய எண்ணி அதில் உறுதியாக இருக்காரோ அவர் அப்பாவத்தை செய்யாவிட்டாலும் பாவியாவார்.

(3) உள்ளங்களில் ஏற்படும் கெட்ட எண்ணங்கள், அதனுடன் சேர்த்து அதனைச் செய்யும் உறுதி வந்து, உள்ளமும் அதனைத் தீர்மானித்தால், செயல் ரீதியாக அது தோற்றம் பெறாவிட்டாலும் அது பாவமாகவே கணிக்கப்படும்.

١٧- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: "لا تُورِدُوا الْمُمْرِضَ على المُصِحِّ".

(صحيح البخاري، رقم الحديث ٥٧٧٤، وصحيح مسلم، رقم الحديث ١٠٥ – (٢٢٢١)، واللفظ للبخاري).

(17) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : வியாதி பிடித்த ஒட்டகத்தை ஆரோக்கியமான ஒட்டகத்திடம் கொண்டு செல்லாதீர்கள்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம்: புஹாரி 5774, முஸ்லிம் 2221. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து)

(16ம் 17ம் நபிமொழிகளின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) நோய் பரவும் இடங்களிலிருந்து தூரமாகியிருத்தல், (தொற்று) நோயாளிகளுடன் (அதிகம்) கலக்காமலிருத்தல், மனிதனுக்குத் தீங்கு

விளைவிக்கும் அம்சங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளல் போன்றவற்றின் மூலம் நோய்களிலிருந்து பாதுகாப்பும் ஆரோக்கியமும் முன்னெச்சரிக்கையும் எடுத்துக்கொள்வதை இந்நபிமொழி தூண்டுகின்றது.

(2) உடல், உள ரீதியான நோவினைகள் மற்றும் நோய்களிலிருந்து முன்னெச்சரிக்கையாக இருப்பது தவக்குல் எனும் அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டுவதிலுள்ளதாகும்.

(3) (தொற்று) நோயாளிகளுடன் கலந்திருப்பது சில சமயம் அந்த நோய்கள் மற்றவர்களுக்கும் பரவக் காரணமாகின்றது. எனவே (அது போன்ற) நோயாளிகளுடன் அதிகம் கலக்காமலிருப்பது சிறந்தது.

١٨- عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ ﷺ: "أَنَا أَكْثَرُ الْأَنْبِيَاءِ تَبَعاً يَوْمَ الْقِيَامَةِ، وَأَنَا أَوَّلُ مَنْ يَقْرَعُ بَابَ الْجَنَّةِ".

(صحيح مسلم، رقم الحديث ٣٣١- (١٩٦)، ).

(18) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நானே மறுமை நாளில் இறைத்தூதர்களிலேயே அதிகமான மக்களால் பின்பற்றப்படுபவன் ஆவேன். சுவனத்தின் வாயிலை முதலில் தட்டுபவனும் நானே.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 331.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 6ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) இந்நபிமொழி இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. ஏனெனில் அல்லாஹ் அவரை அதிக மக்களால் பின்பற்றப்படுபவராகவும், சுவன வாயிலை முதலில் தட்டுபவராகவும் ஆக்கிவைத்துள்ளான்.

(2) இறைத்தூதர் (ஸல்) அவர்களை உண்மைப்படுத்தி விசுவாசங்கொள்வது ஒவ்வோர் மனிதன் மீதும் கடமையாகும். அல்லாஹ் அவரை அனைத்து மக்களுக்கும், உலகின் அனைத்துப் பாகங்களுக்கும் தூதராக அனுப்பியுள்ளான்.

(3) ஒரு மனிதன் சுவனம் நுழைய விரும்பினால் (அந்த) இறைத்தூதர் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.

**١٩-  عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: " إِنَّ الرَّحِمَ شَجْنَةٌ مِنَ الرَّحْمَنِ؛ فَقَالَ اللَّهُ : مَنْ وَصَلَكِ وَصَلْتُهُ، وَمَنْ قَطَعَكِ قَطَعْتُهُ".**

(صحيح البخاري، رقم الحديث ٥٩٨٨).

(19) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உறவு (ரஹிம்) என்பது, அளவிலா அருளாளன் (ரஹ்மான்) இடமிருந்து வந்த (அருட்கொடை) கிளையாகும். எனவே, இறைவன் (உறவை நோக்கி) 'உன்னோடு ஒட்டி வாழ்பவனுடன் நானும் உறவுபாராட்டுவேன். உன்னை முறித்துக் கொள்பவனை நானும் முறித்துக்கொள்வேன்' என்று கூறினான்.

அறிவிப்பவர் : அபூ ஹு ரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 5988.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) உறவினர்களைத் துண்டிப்பது பெரும்பாவமாகும். அது தொடர்புகளை விரிவாக்கி, உறவினர்களுக்கிடையிலுள்ள ஒற்றுமையைப் பிரித்து, அவர்களுக்கு மத்தியில் எதிர்ப்பையும் வெறுப்பையும்

பரத்துவதுடன் இவ்வுலகிலேயே தண்டனையைப் பெற்றுத்தருகின்றது.

(2) நல்ல விடயங்களை உறவினர்களுக்குச் சேர்த்தி, அவர்களை விட்டும் கெடுதிகளைத் தடுப்பதன் மூலம் உறவினர்களுடன் சேர்ந்து நடப்பது முஸ்லிம்களுக்குக் கடமையாகும்.

(3) உறவினர்களுக்கு மத்தியில் பாசமுள்ள தொடர்புகளை வலுப்படுத்துவதை இந்நபிமொழி ஆர்வமூட்டுகின்றது.

**٢٠- عَنْ سَلْمَانَ بْنِ عَامِرٍ الضَّبِّيِّ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللّٰهِ ﷺ: "اَلصَّدَقَةُ عَلَى الْمِسْكِيْنِ صَدَقَةٌ، وَعَلَى ذِي الْقَرَابَةِ اِثْنَتَانِ: صَدَقَةٌ وَصِلَةٌ".**

(سنن ابن ماجه، رقم الحديث ١٨٤٤، قَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(20) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஏழைக்கு தர்மம் செய்வது ஒரு தர்மமாகவே நோக்கப்படும். உறவினருக்கு தர்மம் செய்வது இரண்டாக நோக்கப்படும். ஒன்று தர்மம், மற்றது உறவினரைச் சேர்ந்து நடத்தல்.

அறிவிப்பவர் : ஸல்மான் பின் ஆமிர் அழ்ழப்பீ (ரலி).

ஆதாரம் : இப்னு மாஜா:. 1844. அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

☞**அறிவிப்பாளர் பற்றி :**

ஸல்மான் பின் ஆமிர் அழ்ழப்பீ என்ற இவர் ஒரு நபித்தோழராவார். நபியவர்களைத் தொட்டும் 13 பொன்மொழிகளை அறிவித்துள்ளார். பிற்காலத்தில் பஸராவில் வசித்து அங்கேயே மரணித்தார்கள்.

☞**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) தர்மத்தை உறவினர்களுக்கு வழங்குவதை இந்நபிமொழி தூண்டுகின்றது.

(2) தர்மத்தை உறவினர்களுக்கு வழங்குவது குடும்ப உறவின் வழிகளிலுள்ளதுடன் குடும்ப உறவில் உள்ள நேசத்தை பலப்பத்துவதாகவும் உள்ளது.

(3) உறவினர்களுக்கோ ஏனையோருக்கோ கொடுத்த தர்மத்தை பிறரிடம் சொல்லிக்காட்டுவதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

**٢١- عَنْ أَنَسٍ ﷺ قَالَ: كَانَ النَّبِيُّ ﷺ يَقُوْلُ: "اَللَّهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْهَمِّ وَالحَـزَنِ، وَالعَجْـزِ وَالْكَسَـلِ، وَالجُـبْنِ والبُخْـلِ، وضَـلَعِ الـدَّيْنِ، وَغَلَبَـةِ الرِّجَالِ".**

(صحيح البخاري، رقم الحديث ٦٣٦٩، وصحيح مسلم، رقم الحديث ٥٠- (٢٧٠٦)، واللفظ للبخاري).

(21) நபி (ஸல்) அவர்கள் 'அல்லாஹு ம்ம இன்னீ அஊது பிக மினல் ஹம்மி, வல்ஹஸனி, வல்அஜ்ஸி, வல்கஸலி, வல்ஜு ப்னி, வல்புக்லி, வளலஇத் தைனி, வஃகலபத்திர் ரிஜால்' எனப் பிரார்த்தித்து வந்தார்கள்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : புஹாரி 6369, முஸ்லிம் 2706. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

**பொருள்:**

இறைவா! கவலையிலிருந்தும் துக்கத்திலிருந்தும் இயலாமையிலிருந்தும் சோம்பலிருந்தும் கோழைத் தனத்திலிருந்தும் கஞ்சத்தனத்திலிருந்தும் கடன் சுமையிலிருந்தும் மனிதர்களின் அடக்கு முறைகளிலிருந்தும் உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன்.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 6ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) மேற்கண்ட நபிமொழியில் கூறப்பட்டுள்ள 8 விடயங்களை விட்டும் பாதுகாப்புத் தேடுவதானது இவை மனித வாழ்கையின் சந்தோசத்தை சீர்குலைக்கக் கூடியது என்பதைக் காட்டுகின்றது.

(2) உலக, மார்க்கக் கடமைகள், உரிமைகளை நிறைவேற்றுவதில் இந்த 8 விடயங்களும் பாதிப்புச் செலுத்தும் என்பதனாலேயே இவற்றை விட்டும் பாதுகாப்புத் தேடும்படி வந்துள்ளது.

(3) தீய, பொல்லாப்பான விடயங்களில் விழுவதைத் தவிர்ந்து கொள்ளல் மனிதனுக்கு அவசியமாகும்.

**٢٢- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: "لاَ يَقْبَلُ اللهُ صَلاَةَ أَحَدِكُمْ إِذَا أَحْدَثَ حَتَّى يَتَوَضَّأَ".**

(صحيح البخاري، رقم الحديث ٦٩٥٤، وصحيح مسلم، رقم الحديث ٢- (٢٢٥)، واللفظ للبخاري).

(22) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு சிறுதுடக்கு ஏற்பட்டால் நீங்கள் வுழூச் செய்து கொள்ளாத வரை உங்கள் தொழுகையை அல்லாஹ் ஏற்கமாட்டான்.

அறிவிப்பவர் : அபூ ஹு ரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 6954, முஸ்லிம் 225. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது. )

☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) சுத்தமி(வுளூவி)ல்லாமல் தொழுகை ஏற்கப்படமாட்டாது என்பதை இந்நபிமொழி உணர்த்துகின்றது.

(2) தொழுகையை நிறைவேற்ற பரிபூரணமான சுத்தத்தைக் கடைபிடிப்பது முஸ்லிமுக்குக் கடமையாகும்.

(3) பரிபூரணமான சுத்தம் (வுளூ) சுத்தமான நீர் அல்லது சுத்தமான மணலினால்தான் ஏற்படும்.

٢٣- عَنْ أَبِيْ سَعِيْدٍ اَلْخُدْرِيِّ ﷺ قَالَ: قَالَ النَّبِيُّ ﷺ: "لاَ تَسُبُّوْا أَصْحَابِيْ؛ فَلَوْ أَنَّ أَحَدَكُمْ أَنْفَقَ مِثْلَ أُحُدٍ ذَهَبًا، مَا بَلَغَ مُدَّ أَحَدِهِمْ وَلاَ نَصِيْفَهُ".

(صحيح البخاري، رقم الحديث ٣٦٧٣، وصحيح مسلم، رقم الحديث ٢٢٢ - (٢٥٤١)، واللفظ للبخاري).

(23) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : என் தோழர்களைத் திட்டாதீர்கள். ஏனெனில், உங்களில் ஒருவர் உஹுது மலையளவு தங்கத்தைச் செலவு செய்தாலும் (என் தோழர்களான) அவர்கள் (இறை

வழியில்) செலவு செய்த இரண்டு கைக் குவியல் அல்லது அதில் பாதியளவைக் கூட (அவரின்) அந்த தர்மம் எட்ட முடியாது.

அறிவிப்பவர் : அபூ ஸஈதுல் குத்ரீ (ரலி).

ஆதாரம் : புஹாரி 3673, முஸ்லிம் 2541. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 5ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) நபித்தோழர்களை கண்ணியப்படுத்துவது கடமையென்பதை இந்நபிமொழி உணர்த்துகின்றது.

(2) சொல்லாலோ செயலாலோ நபித்தோழர்களுக்குத் தீங்கு விளைவிப்பது முஸ்லிமுக்கு ஹராமாகும்.

(3) பிற்காலத்தில் வந்தவர்களைவிட நபித்தோழர்கள் சிறந்தவர்கள் என்பதை இந்நபிமொழி கூறுகின்றது.

٢٤- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ: اَلرَّجُلُ عَلَى دِيْنِ خَلِيْلِهِ؛ فَلْيَنْظُرْ أَحَدُكُمْ مَنْ يُخَالِلْ".

(جامع الترمذي، رقم الحديث ٢٣٧٨ ، وسنن أبي داود، رقم الحديث ٤٨٣٣ ، واللفظ للترمذي، قَالَ الإمام الترمذي عن هذا الحديث: بأنه حسن غريب، وقَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه حسن).

(24) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒரு மனிதன் தனது தோழனின் குணங்களையே சார்ந்திருப்பான். உங்களில் ஒருவர் தான் யாரைத் தோழனாக்குவது என்பதைப் பார்த்துக் கொள்ளட்டும்.

அறிவிப்பவர் : அபூ ஹு ரைரா (ரலி).

ஆதாரம் : அபூ தாவூத் 4833, திர்மிதீ 2378, (இவ்வார்த்தை திர்மிதீயிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் கரீப் எனும் தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஹஸன் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) நலவிலோ கெடுதியிலோ தோழர்களின் தாக்கத்திற்குள்ளாவது மனிதர்களின் இயற்கை என்பதை இந்நபிமொழி உணர்த்துகின்றது.

(2) நல்லவர்களுடன் தோழ்மை வைத்துக் கொள்ளும்படியும், தீயவர்களைவிட்டு ஒதுங்கும்படியும் இந்நபிமொழி தூண்டுகின்றது.

(3) நல்லவர்கள் என்போர் உலக, மார்க்க விடயங்களில் பயனளிப்போர். தீயவர்கள் என்போர் அவ்விரண்டிலும் தீங்கு செய்வோர்.

٢٥- عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا ، يَقُوْلُ: سَمِعْتُ رَسُوْلَ اللهِ ﷺ يَقُولُ: "أَفْضَلُ الذِّكْرِ لاَ إِلَهَ إِلاَّ اللهُ، وَأَفضَلُ الدُّعَاءِ اَلْحَمْدُ لِلَّهِ".

(جـامع الترمـذي، رقـم الحـديث ٣٣٨٣، وأيضـا: سـنن ابـن ماجـه، رقـم الحديث ٣٨٠٠، قَالَ الإمام الترمذي عن هذا الحديث بأنـه: حسـن غريـب، وقَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث بأنه: حسن).

(25) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : திக்ருகளில் சிறந்தது 'லாஇலாஹ இல்லல்லாஹு ' ( உண்மையான வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை) என்பதாகும். பிரார்த்தனையில் சிறந்தது 'அல்ஹம்து லில்லாஹ்' (எல்லாப்புகழும் ஏக அல்லாஹ்வுக்கே) என்பதாகும்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி).

ஆதாரம் : திர்மிதீ 3383, இப்னு மாஜாஃ 3800, இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் கரீப் எனும் தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஹஸன் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

☞**அறிவிப்பாளர் பற்றி :**

ஜாபிர் பின் அப்தில்லாஹ் அல் அன்ஸாரீ (ரலி) அவர்கள் பிரபலமான ஒரு நபித்தோழராவார். நபி (ஸல்) அவர்களுக்கும் மதீனா வாசிகளுக்குமிடையில் நடைபெற்ற உடன்படிக்கையில் தனது தந்தையுடன் சேர்ந்து நபியவர்களுக்கு பைஅத் (உறுதிப்பிரமாணம்) செய்தார்கள். (ஹு தைபியாவில்) மரணத்திற்காக

நபியவர்களிடம் உறுதிமொழியளித்தவர்களில் இவரும் ஒருவர். இவர் அதிகமான நபிமொழிகளை அறிவித்தவர்களில் அடங்குவதுடன், அவர் அறிவித்த நபிமொழிகளின் எண்ணிக்கை 1540க உள்ளது. ஹிஜ்ரி 73ல் மரணித்தார்கள். (இவரது மரண ஆண்டில் வேறு கருத்துக்களும் உள்ளன.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) மனிதனுக்கு தனது இறைவனின் நேசம் எந்தளவு அதிகரிக்கின்றதோ அந்தளவு அவன் படைத்துப்பரிபாலிக்கும் இறைவனை நினைவுகூர்வது அதிகரிக்கின்றது.

(2) அல்லாஹ்வை நினைவுகூர்வதும் அவனிடம் பிரார்த்திப்பதும் அவன்பால் நெருங்கும் வழிகளிலுள்ளதாகும்.

(3) ஏகத்துவ வார்த்தையான 'லாஇலாஹ இல்லல்லாஹ்'விற்கு நிகர் ஒன்றுமில்லை. அதனால் தான் அல்லாஹ்வை திக்ரு செய்வதில் இவ்வார்த்தை மிகச்சிறந்ததாக உள்ளது.

(4) அல்லாஹ்வை அழகியமுறையில் புகழவும், மகத்தான நன்றி செலுத்தவும் ஏற்ற வார்த்தை 'அல்ஹம்து லில்லாஹ்'வாகும். (புகழனைத்தும் அல்லாஹ்விற்கே) அதனால்தான் பிரார்த்தனைகளில் அது சிறந்ததாக உள்ளது.

٢٦- عَنْ عَبْدِ اللَّهِ بْنِ مَسْعُوْدٍ ﷺ قَالَ: كُنَّا نَقُوْلُ: التَّحِيَّةُ فِي الصَّلاَةِ، وَنُسَمِّيْ، وَيُسلِّمُ بَعْضُنَا عَلَى بَعْضٍ؛ فَسَمِعَهُ رَسُوْلُ اللّٰهِ ﷺ؛ فَقَالَ: "قُوْلُوْا: اَلتَّحِيَّاتُ لِلَّهِ، وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ، اَلسَّلاَمُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ، اَلسَّلاَمُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللّٰهِ الصَّالِحِيْنَ، أَشْهَدُ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللّٰهُ، وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ ؛ فَإِنَّكُمْ إِذَا فَعَلْتُمْ ذَلِكَ؛ فَقَدْ سَلَّمْتُمْ عَلَى كُلِّ عَبْدٍ لِلَّهِ صَالِحٍ، فِي السَّمَاءِ وَالْأَرْضِ".

(صحيح البخاري، رقم الحديث١٢٠٢، وصحيح مسلم، رقم الحديث ٥٥- (٤٠٢)، واللفظ للبخاري).

(26) தொழுகையில் அத்தஹிய்யாத் ஓதும்போது ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு ஒருவரின் மீது மற்றவர் ஸலாம் கூறி வந்தோம். இதைச் செவியுற்ற நபி(ஸல்) அவர்கள் 'அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலவாது வத்தய்யிபாது அஸ்ஸலாமு அலைக அய்யுஹந்நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹூ அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ' என்று கூறுங்கள்! இவ்வாறு நீங்கள் கூறினால் வானம், பூமியிலுள்ள எல்லா நல்லடியார்களுக்கும் ஸலாம் கூறியவர்களாவீர்கள் எனக் குறிப்பிட்டார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி).

ஆதாரம்: புஹாரி 1202, முஸ்லிம் 402. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

**பொருள் :**

காணிக்கைகளும் வணக்கங்களும் பாராட்டுக்களும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே உங்களின் மீது ஸலாமும் அல்லாஹ்வின் ரஹ்மத்தும் பரகத்தும் ஏற்படட்டுமாக! எங்களின் மீதும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் அனைவர் மீதும் ஸலாம் உண்டாகட்டும், உண்மையான வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று உறுதியாக நம்புகிறேன். மேலும், முஹம்மத்(ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதருமாக இருக்கிறார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

**☞அறிவிப்பாளர் பற்றி :**

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) நபித்தோழர்களில் பிரபலமானவரும், மிகத் திறமையாக அல்குர்ஆனை பாராயணம் செய்யக் கூடியவருமாவார். இவர்கள் நபியவர்களிடமிருந்து அறிவித்த நபிமொழிகள் 848. நபியவர்களுடன் அனைத்து யுத்தங்களிலும் கலந்து கொண்டார்கள். நபியவர்களின் மரணத்திற்குப் பின் யர்மூக் போரில் கலந்து கொண்டார்கள். கலீபா உமர் (ரலி) அவர்கள் தனது ஆட்சி காலத்தில் கூபாவிற்கு மார்க்கத்தை கற்றுக்கொடுக்க இவர்களை

அனுப்பினார்கள். பின்னர் உஸ்மான் (ரலி) அவர்கள் தனது ஆட்சியில் கூபாவிற்கு கவர்னராக நியமித்தார்கள். பின்னர் மதீனாவிற்குத் திரும்பும்படி ஏவினார்கள். தனது 60க்கும் 70க்கும் இடைப்பட்ட வயதில் ஹிஜ்ரி 32 ம் ஆண்டு மதீனாவில் மரணித்து பகீஉல் கர்கதில் அடக்கம் செய்யப்பட்டார்.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) அல்லாஹ்விற்குக் காணிக்கை செலுத்தும் முறையை இந்நபிமொழி உள்ளடக்கியிருக்கின்றது.

(2) மறுமை வரை நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம் சொல்லும் முறையை இந்நபிமொழி கூறுகின்றது. அது எவ்வாறெனில் : அஸ்ஸலாமு அலைக அய்யுஹந்நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு . (பொருள்: நபியே உம்மீது சாந்தியும் அல்லாஹ்வின் அருளும் பரகத்தும் (அபிவிருத்தி) உண்டாகட்டும். )

(3) இஸ்லாத்திலுள்ள அடிப்படைக்கொள்கை, மார்க்க சட்டதிட்டங்கள், நற்குணங்கள் அனைத்தும், 'வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வத் தவிர வேறில்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதர்' என்ற அடிப்படை ஷஹாதத் கலிமாவிலிருந்து உருவானவையே.

(4) கடமைகள் மற்றும் உரிமைகளை இஸ்லாத்தில் வேண்டப்பட்ட பிரகாரம் நிறைவேற்றுபவனே நல்லடியான் ஆவான்.

**٢٧- عَنْ مِقْدَامِ بْنِ مَعْدِيْكَرِبَ ﷺ قَالَ: سَمِعْتُ رَسُوْلَ اللّٰهِ ﷺ يَقُوْلُ: "مَا مَلَأَ آدَمِيٌّ وِعَاءً شَرًّا مِنْ بَطْنٍ، حَسْبُ الآدَمِيِّ أُكُلَاتٌ يُقِمْنَ صُلْبَهُ؛ فَإِنْ كَانَ لاَ مَحَالَةَ؛ فَثُلُثٌ لِطَعَامِهِ؛ وَثُلُثٌ لِشَرَابِهِ؛ وَثُلُثٌ لِنَفَسِهِ".**

(جامع الترمذي، رقم الحديث ٢٣٨٠ ، وسنن ابن ماجه، رقم الحديث ٣٣٤٩ ، واللفظ للترمذي، قَالَ الإمام الترمذي عن هذا الحديث بأنه: حسن صحيح، وقَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث بأنه: صحيح).

(27) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : வயிற்றை விட தீய ஒரு பாத்திரத்தை ஒரு மனிதன் நிரப்பவில்லை. தன்னுடைய முதுகந் தண்டை நிலை நிறுத்துக்கொள்ள சில பிடி கவளங்கள் மனிதனுக்குப் போதுமானது. அவன் (அதைவிட அதிகம்) சாப்பிட்டே ஆக வேண்டுமென்றால் (அவனுடைய வயிற்றில்) மூன்றிலொரு பகுதியை உணவுக்காகவும், மூன்றிலொரு பகுதியை நீருக்காகவும் (எஞ்சிய) மூன்றிலொரு பகுதியை சுவாசிக்கவும் வைத்துக்கொள்ளட்டும்.

அறிவிப்பவர் : மிக்தாத் பின் மஃதீகரிப் (ரலி).

ஆதாரம் : திர்மிதீ 2380, இப்னு மாஜா∴ 3349 (இவ்வார்த்தை திர்மிதியிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**☞அறிவிப்பாளர் பற்றி :**

அபூ கரீமா என்ற புனைப்பெயருடைய மிக்தாம் பின் ம∴தீகரிப் பின் அம்ரு அல் கின்தீ பிரபலமான நபித்தோழராவார். (ஸிரியாவிலுள்ள) ஹிம்ஸ் எனும் ஊரில் வசித்த இவர் நபியவர்களிடத்தில் இஸ்லாத்தைத் தழுவ கூட்டங் கூட்டமாக மக்கள் வந்த காலப்பகுதியில் ஒரு கூட்டத்துடன் வந்தார். ஷாம் (ஸிரியா), இராக் போன்ற நகரங்களில் நடைபெற்ற இஸ்லாமிய வெற்றிப் போர்களில் கலந்துகொண்டதுடன், குறிப்பாக யர்மூக் மற்றும் காதிஸிய்யாப் போர்களில் கலந்து கொண்டார்கள். முஸ்லிம்கள் தமது எதிரிகளுடன் செய்த எந்தவொரு போரிலிருந்தும் இவர் பின்வாங்கவில்லை. நபிமொழிக்கிரந்தங்களில் இவருடைய 42 பொன்மொழிகள் பதியப்பட்டுள்ளன. இவர் ஷாம் வாசியாகக் கணிக்கப்படுகிறார். ஹிஜ்ரி 87ல் தனது 91வது வயதில் அங்கேயே மரணித்தார்கள்.

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) உணவு, பாணங்களை உட்கொள்வதில் நடுநிலையைக் கடைபிடிக்க வேண்டும். ஏனெனில் அதுவே ஆரோக்கியத்திற்கும் தூய்மையான சுவாசத்திற்கும் காரணமாகும். அதனால் முஸ்லிம் அதிகமாக உணவு, பாணங்களை உட்கொள்ளலாகாது.

(2) வயிர் நிரம்ப உட்கொள்வது சோம்பலுக்கும் நோய்களுக்கும் காரணமாகின்றது. மேலும் (அல்லாஹ்விற்கு) வழிப்படுவதை விட்டும் தடுப்பதுடன் சுறுசுறுப்பின்மை, பாவம் ஆகியவற்றின்பால் இட்டுச்செல்கின்றது.

(3) உணவு, பாணங்களை உட்கொள்ளும்போது இஸ்லாமிய ஒழுக்கங்களைப் பேணுவது அவசியமாகும். இஸ்லாத்தில் விரும்பத்தகாத மிதமிஞ்சி உண்ணும் விருப்பத்தைத் விட வேண்டும்.

**٢٨- عَنْ عَبْدِ اللَّهِ بْنِ مَسْعُوْدٍ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ: "أَوَّلُ مَا يُحَاسَبُ بِهِ الْعَبْدُ اَلصَّلاَةُ، وَأَوَّلُ مَا يُقْضَى بَيْنَ النَّاسِ فِي الدِّمَاءِ".**

(سنن النسائي، رقم الحديث ٣٩٩١، قَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(28) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : (மறுமையில்) முதலாவதாக ஓர் அடியானிடம் தொழுகை பற்றியே விசாரிக்கப்படும். முதலாவதாக தீர்ப்பு வழங்கப்படுவது இரத்தம் சம்பந்தட்ட (கொலைக்) குற்றங்களில்தான்.

அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி).

ஆதாரம்: நஸாஈ 3991. அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 26ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) இறையச்சம், இறைவனின் நெருக்கம் ஆகியவற்றின் பிரதான அடிப்படை தொழுகையாகும்.

(2) இஸ்லாத்தில் மகத்தான வணக்கம் தொழுகையே. எனவே அதில் கடும் கரிசனை எடுப்பது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

(3) இஸ்லாம் மனிதனை கண்ணியப்படுத்தி அவனுடைய உயிரைப் பாதுகாக்குமாறு தூண்டுகின்றது. எனவே உரிமையில்லாமல் அவனைக் கொல்வது கூடாது.

**٢٩- عَنْ أَنَسٍ ﷺ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ: "اُنْصُرْ أَخَاكَ ظَالِمًا أَوْ مَظْلُوْمًا؛ فَقَالَ رَجُلٌ: يَا رَسُوْلَ اللهِ، أَنْصُرُهُ إِذَا كَانَ مَظْلُوْمًا، أَفَرَأَيْتَ إِذَا كَانَ ظَالِمًا كَيْفَ أَنْصُرُهُ؟ قَالَ: تَحْجُزُهُ، أَوْ تَمْنَعُهُ مِنَ الظُّلْمِ؛ فَإِنَّ ذَلِكَ نَصْرُهُ".**

( صحيح البخاري، رقم الحديث ٦٩٥٢ ).

(29) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : 'உன் சகோதரன் அக்கிரமக்காரனாக இருக்கும் நிலையிலும் அக்கிரமத்துக்குள்ளானவனாக இருக்கும் நிலையிலும் அவனுக்கு நீ உதவி செய்'. அப்போது ஒருவர், இறைத்தூதர் அவர்களே! அக்கிரமத்திற்குள்ளான வனுக்கு நான் உதவுவேன். (அதுதான்.) அக்கிரமக்காரனுக்கு எப்படி நான் உதவுவேன்? கூறுங்கள்! என்றார். நபி(ஸல்) அவர்கள், 'அவனை அக்கிரமம் செய்ய விடாமல் நீ தடுப்பாயாக! இதுவே நீ அக்கிரமக்காரனுக்குச் செய்யும் உதவியாகும்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : புஹாரி 6952.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 6ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) நீதியை நிலைநாட்டுவது அல்லாஹ்வுடைய இஸ்லாமிய மார்க்கத்தின் சிறப்பியல்புகளிலுள்ளதாகும்.

(2) மனித உரிமைகளைப் பேணுவதை இஸ்லாம் தூண்டுகின்றது.

(3) அநியாயத்தை அதன் அனைத்து வகைகளுடன் இந்நபிமொழி தடுக்கின்றது.

**٣٠- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ قَالَ: كَانَ رَسُوْلُ اللهِ ﷺ يُعَلِّمُ أَصْحَابَهُ: يَقُوْلُ: "إِذَا أَصْبَحَ أَحَدُكُمْ؛ فَلْيَقُلْ: اَللَّهُمَّ بِكَ أَصْبَحْنَا وَبِكَ أَمْسَيْنَا وَبِكَ نَحْيَا وَبِكَ نَمُوْتُ وَإِلَيْكَ الْمَصِيْرُ، وَإِذَا أَمْسَى؛ فَلْيَقُلْ: اَللَّهُمَّ بِكَ أَمْسَيْنَا وَبِكَ أَصْبَحْنَا وَبِكَ نَحْيَا وَبِكَ نَمُوْتُ وَإِلَيْكَ النُّشُوْرُ".**

(جامع الترمذي، رقم الحديث ٣٣٩١، وسنن ابن ماجه، رقم الحديث ٣٨٦٨، واللفظ للترمذي، قال الإمام الترمذي عن هذا الحديث بأنه: حديث حسن، وقال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث بأنه: صحيح).

**(30) நபி (ஸல்) அவர்கள் தனது தோழர்களுக்கு பின்வருமாறு கூறக்கூடியவர்களாக இருந்தார்கள் : உங்களில் ஒருவர் காலைப் பொழுதை அடைந்தால் 'அல்லாஹும்ம பிக அஸ்பஹ்னா, வபிக அம்ஸைனா, வபிக நஹ்யா, வபிக நமூது, வஇலைகல் மஸீர்' என்று கூறட்டும். அவர் மாலை வேளையை அடைந்தால் 'அல்லாஹும்ம பிக அம்ஸைனா, வபிக அஸ்பஹ்னா, வபிக நஹ்யா, வபிக நமூது, வஇலைகன் நுஷூர்' என்று கூறட்டும்.** [1]

(1) இப்பிரார்த்தனையில் பல ஸஹீஹான அறிவிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. அதில் ஒன்றே மேற்கூறப்பட்ட பிரார்த்தனை. இன்னொரு அறிவிப்பில் : காலைப் பொழுதை அடைந்தால் 'அல்லாஹும்ம பிக அஸ்பஹ்னா, வபிக அம்ஸைனா, வபிக நஹ்யா, வபிக நமூது, வஇலைகன் நுஷூர்' என்று கூறட்டும். மாலை வேளையை அடைந்தால் 'அல்லாஹும்ம பிக

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : திர்மிதீ 3391, இப்னு மாஜாஃ 3868 (இவ்வார்த்தை திர்மிதியிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் எனும் தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**பொருள் :**

காலையில் : இறைவா! உன்னைக் கொண்டே நாம் காலையை அடைந்தோம். மேலும் உன்னைக் கொண்டே மாலையை அடைந்தோம். மேலும் நாம் உயிர் வாழ்வதும் மரணிப்பதும் உன்னைக் கொண்டுதான். (எமது) இறுதி முடிவும் உன்னிடமே.

மாலையில் : இறைவா! உன்னைக் கொண்டே மாலையை அடைந்தோம். மேலும் உன்னைக் கொண்டே நாம் காலையை அடைந்தோம். மேலும் நாம் உயிர் வாழ்வதும் மரணிப்பதும் உன்னைக் கொண்டுதான். (நாம் மீண்டும்) உயிர்த்தெழுவதும் உன்னிடமே.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

---

அம்ஸைனா, வபிக அஸ்பஹ்னா, வபிக நஹ்யா, வபிக நமூது, வஇலைகல் மஸீர். என்றும் இடம்பெற்றுள்ளது. (மொழிபெளர்ப்பாளர்).

(1) அல்லாஹ்விடம் உதவிதேடி, அவனிடம் பொறுப்புக்களைச் சாட்டி (எந்நேரமும்) அவனை நினைவுகூர்வது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

(2) மேற்கண்ட பிரார்த்தனையை மனனமிட்டு ஒவ்வொரு காலை, மாலையிலும் பேணி ஓதுவதை இந்நபிமொழி தூண்டுகின்றது.

(3) மனிதன் இறுதியாக ஒதுங்குமிடம் அல்லாஹ்விடம்தான் என்று உறுதியாக நம்புவது அவசியமாகும்.

٣١- عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا، عَنِ النَّبِيِّ ﷺ، قَالَ: "مَنْ قَالَ: سُبْحَانَ اللهِ الْعَظِيْمِ، وَبِحَمْدِهِ؛ غُرِسَتْ لَهُ نَخْلَةٌ فِي الْجَنَّةِ".

(جامع الترمذي، رقم الحديث ٣٤٦٤، قال الإمام الترمذي عن هذا الحديث بأنه: حسن غريب صحيح، وقال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث بأنه: صحيح ).

(31) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் 'ஸுப்ஹானல்லாஹில்அளீம் வபிஹம்திஹீ' என்று கூறுவாரோ அவருக்கு சுவனத்தில் ஒரு பேரீத்தமரம் நட்டப்படும்.

அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி).

ஆதாரம் : திர்மிதீ 3464. இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் கரீப் ஸஹீஹ் எனும் தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

பொருள் : மகத்துவமிக்க அல்லாஹ்வைத் துதிக்கிறேன். அவனுக்கே அனைத்துப் புகழும்.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 25ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) நேரம் கிடைக்கும் போதெல்லாம் அல்லாஹ்வைத் துதித்து, புகழ்ந்து அவனை நினைவுகூர்வது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அவசியமாகும்.

(2) 'ஸு ப்ஹானல்லாஹி வபிஹம்திஹீ' (அல்லாஹ்வைத் துதித்து அவனைப் புகழ்கிறேன்) என்ற இந்த வார்த்தையின் மூலம் (அல்லாஹ்வை) துதிப்பது மற்றும் புகழ்வதன் சிறப்பை இந்நபிமொழி எடுத்துக்காட்டுகின்றது.

(3) இந்நபிமொழியில் பேரீத்தமரத்தைக் கூறியிருப்பதன் காரணம் அதன் பயன்கள் அதிகமென்பதாலும், அதன் பழங்கள் தூய்மையானது என்பதாலுமாகும்.

٣٢- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ، قَالَ: "لاَ تَسُبُّوا الدَّهْرَ؛ فَإِنَّ اللّٰهَ هُوَ الدَّهْرُ".

(صحيح مسلم، رقم الحديث ٥- (٢٢٤٦)، ).

(32) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நீங்கள் காலத்தைத் திட்டாதீர்கள். ஏனெனில் அல்லாஹ்வே காலத்தை இயக்கிக் கொண்டிருக்கிறான்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 2246.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) ஒரு முஸ்லிம் தனக்கு ஏற்படும் பிரச்சினைகள், இடர்களுக்காக காலத்தை ஏசுவதோ, திட்டுவதோ, காலம் செய்த கொடுமையே என்று கூறுவதோ கூடாது. ஏனெனில் காலமும் படைப்பினங்களில் ஒன்றாகும். அதற்கென எவ்வேலையும் கிடையாது. மாறாக அல்லாஹ்வால் அது வசப்படுத்தப்பட்டுள்ளது. மனிதன் சுயமாகச் செய்யும் செயற்களுக்கும் நடவடிக்கைளுக்குமே பொறுப்பாளனாகிறான்.

(2) (சில அறிஞர்களின் கருத்துப் படி நபிமொழியில் இடம்பெற்றுள்ள) 'அத்தஹ்ர்' என்பது அல்லாஹ்வுடைய பெயர்களில் ஒன்றாக இருந்தால் அதன் விளக்கம், அவன் ஆதியானவன் அவனுக்கு

முன் எந்தவொன்றும் இல்லை, அல்லது அவன் எப்போதுமே ஆதியானவன் என்பதாகும்.

(3) அனர்த்தங்கள், சோதனைகளின் போது பொறுமையாக இருப்பது முஸ்லிமுக்கு அவசியமாகும். முடிந்தளவு தனக்கும் தனது மனைவி மக்களுக்கும் பாதுகாப்பு, ஆரோக்கியத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

٣٣- عَنْ أَبيْ هُرَيْرَةَ ﷺ كَانَ الرَّسُوْلُ ﷺ يَسْكُتُ بَيْنَ التكبيرِ وَبَيْنَ الْقِرَاءَةِ إِسْكَاتَةً ... فَقُلْتُ: بِأَبِيْ وَأُمِّيْ يَا رَسُوْلَ اللهِ؛ إِسْكَاتُكَ بَيْنَ التَّكْبِيْرِ وَالْقِرَاءَةِ، مَا تَقُوْلُ؟ قَالَ: اَللَّهُمَّ بَاعِدْ بَيْنِيْ وَبَيْنَ خطايَايَ، كَمَا بَاعَدتَ بَيْنَ المشرقِ وَالمغربِ، اَللَّهُمَّ نَقِّنِي من الخطايَا كما يُنَقَّى الثوبُ الأبيضُ من الدَّنَسِ، اَللَّهُمَّ اغْسِلْ خطايَايَ بالماءِ والثلجِ والبَرَدِ.

(صحيح البخاري، رقم الحديث ٧٤٤، وصحيح مسلم، رقم الحديث ١٤٧ - (٥٩٨)، واللفظ للبخاري).

(33) நபி(ஸல்) அவர்கள் தக்பீருக்கும் கிராஅத்துக்கும் இடையே சற்று நேரம் மௌனமாக இருப்பார்கள். இறைத்தூதர் அவர்களே! என் தந்தை தாய் தங்களுக்கு அர்ப்பணம். தக்பீருக்கும் கிராஅத்துக்குமிடையே நீங்கள் மௌனமாக இருக்கும் சமயத்தில் என்ன கூறுவீர்கள்? என்று கேட்டேன். 'அல்லாஹும் ம்ம பாஇத் பைனீ வபைன கதாயாய கமா பாஅத்த பைனல் மஷ்ரிகி வல்மஃரிபி.

அல்லாஹு ம்ம நக்கினீ மின் கதாயாய கமா யுனக்கஸ் ஸௌபுல் அப்யழு மினத்தனஸ். அல்லாஹு ம்மஃஸில்னீ மின் கதாயாய பிஸ்ஸல்ஜி வல்மாஇ வல்பரத்.' என்ற பிரார்த்தனையை ஓதிக்காட்டினார்கள்.

அறிவிப்பவர் : அபூ ஹு ரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 774, முஸ்லிம் 598. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

**பொருள் :**

இறைவா! கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையே வெகு தூரத்தை நீ ஏற்படுத்தியதைப் போன்று எனக்கும் எனது தவறுகளுக்குமிடையே தூரத்தை ஏற்படுத்துவாயாக, இறைவா! வெண்மையான ஆடை அழுக்கிலிருந்து தூய்மைப்படுத்தப்படுவது போன்று என்னை என் தவறுகளிலிருந்து தூய்மைப் படுத்துவாயாக, இறைவா! தண்ணீராலும் பனிக்கட்டியாலும் ஆலங்கட்டியாலும் என் தவறுகளைக் கழுவி விடுவாயாக. என்றார்கள்.

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) மேற்கண்ட மகத்தான பிரார்த்தனையை மனனமிடுவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அவசியமாகும்.

(2) நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுமுகமாக மேற்கண்ட பிரார்த்தனையை (தொழுகையில்) ஆரம்பத்

தக்பீருக்கும் பாதிஹா அத்தியாயத்திற்கும் இடையில் ஓதுவது ஸு ன்னாவாகும் என்பது இந்நபிமொழி உணர்த்துகின்றது.

(3) தீமைகள், அவை நடைபெறும் இடங்களை விட்டும் தூரமாகியிருப்பதை இந்நபிமொழி தூண்டுகின்றது.

**٣٤- عَنْ أَبيْ هُرَيْرَةَ ﷺ عَنِ النَّبيِّ ﷺ قَالَ: "ما يُصيبُ المُسلِمَ، مِن نَصَبٍ وَلاَ وَصَبٍ، وَلاَ هَمٌّ وَلاَ حُزْنٍ وَلاَ أذًى وَلاَ غَمٌّ، حَتَّى الشَّوْكَةِ يُشَاكُها، إلاَّ كَفَّرَ اللهُ بِهَا مِن خَطَايَاهُ".**

(صحيح البخاري، رقم الحديث ٥٦٤١، وصحيح مسلم، رقم الحديث ٥٢ - (٢٥٧٣)، واللفظ للبخاري).

(34) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒரு முஸ்லிமைத் தைக்கும் முள் உள்பட அவருக்கு நேரிடும் துன்பம், நோய், துக்கம், கவலை, தொல்லை, மனவேதனை ஆகிய எதுவாயினும் அதற்கு பதிலாக அவரின் பாவங்களிலிருந்து சிலவற்றை அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை.

அறிவிப்பவர் : அபூ ஹு ரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 5641, முஸ்லிம் 2573. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(31 முதல் 34 வரையிலான நபிமொழிகளின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) ஒவ்வொரு மனிதனுக்கும் பிரச்சினைகள், இடர்களில் ஒன்று வந்தேதான் தீரும். அவ்வமயத்தில் பொறுமையைக் கடைபிடித்து, அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டிவிட்டு அதிலிருந்து விடுதலையாகும் முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகும்.

(2) இது போன்ற நபிமொழிகளில் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஒரு நற்செய்தி இருக்கின்றது. அதாவது இது போன்ற உலகத் துன்பங்கள் வந்துகொண்டிருக்கும் போதெல்லாம் அல்லாஹ்விடத்தில் பாவங்களுக்கான பரிகாரம் அல்லது பதவியுயர்வு கிடைக்கின்றது.

(3) சோதனைகள் வருமுன்னரும், வந்த பின்னரும் அல்லாஹ்விடத்தில் அதிலிருந்து பாதுகாப்புத் தேடுவது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

**٣٥ - عَنْ عَلِيِ بْنِ أَبِيْ طَالِبٍ ﷺ، يَقُوْلُ: إِنَّ نَبِيَّ اللّٰهِ ﷺ أَخَذَ حَرِيْرًا؛ فَجَعَلَهُ فِيْ يَمِيْنِهِ، وَأَخَذَ ذَهَبًا؛ فَجَعَلَهُ فِيْ شِمَالِهِ، ثُمَّ قَالَ: "إِنَّ هَذَيْنِ حَرَامٌ عَلَى ذُكُوْرِ أُمَّتِيْ".**

(سنن أبي داود، رقم الحديث ٤٠٥٧، وجامع الترمذي، رقم الحديث ١٧٢٠، واللفظ لأبي داود، وقال الترمذي عن هذا الحديث: بأنه حسن

صحيح، وقال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث أيضا: بأنه صحيح).

(35) நபி (ஸல்) அவர்கள் தனது வலதுகையில் பட்டையும், இடதுகையில் தங்கத்தையும் எடுத்துக் கொண்டு **'இவ்விரண்டும் எனது சமூகத்தில் ஆண்களுக்கு தடைசெய்யப்பட்டவையாகும்'** என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அலீ பின் அபீ தாலிப் (ரலி).

ஆதாரம் : அபூ தாவூத் 4057, திர்மிதீ 1720, (இவ்வார்த்தை அபூதாவூதிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**☞அறிவிப்பாளர் பற்றி :**

அபுல் ஹஸன் என்ற புனைப்பெயருடைய அலீ பின் அபீதாலிப் பின் அப்தில் முத்தலிப் அல் ஹாஷிமீ அல் குரஷீ ஹிஜ்ரத்திற்கு முன் 23ம் ஆண்டு ரஜப் 13ம் நாள் (கி. பி. 599-3-17) பிறந்தார்கள். இவர் நபியவர்களின் சிறிய தந்தையின் மகன் என்ற முறையில் சகோதரராகவும், (மகளை மணந்தவர் என்ற முறையில்) மருமகனாகவும் உள்ளார். சிறுவர்களில் முதலில் இஸ்லாத்தைத் தழுவியவரும் இவரே. அல்லாஹ் நபியவர்களுக்கு மதீனா நோக்கி ஹிஜ்ரத் செல்ல

அனுமதித்த போது தன்னைத் தியாகஞ்செய்து தனது உயிரைப் பணையம் வைத்து நபியவர்களின் விரிப்பில் தூங்கினார்கள். (1) குரைஷியர் அவரை நபியென நினைத்துக் கொண்டிருந்து, அவர்கள் ஏமாற்றப்பட்டது தெரியவந்ததும் அலீ (ரலி) அவர்களைத் துன்புறுத்தினார்கள். எனினும் அலீ (ரலி) அவர்கள் இதனைப் பொருட்படுத்தாது, நபியவர்கள் ஹிஜ்ரத் பயணிக்க சற்று முன் பொறுப்புச் சாட்டிய அமானிதங்களை உரியவர்களிடம் ஒப்படைக்கும் பணியில் ஈடுபட்டார்கள். இவர்கள் அறிவித்த 536 நபிமொழிகள் கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளன.

பூரண சந்திரன் போல் அழகிய முகம் கொண்டவராக அலீ (ரலி) அவர்கள் இருந்தார்கள். வீரம், புத்திக்கூர்மை, பேச்சாற்றல், அணியிலக்கணம் போன்றவற்றில் பிரசித்தி பெற்றிருந்தது போன்று நீதித்துறை, மார்க்கத்தீர்ப்பு, குர்ஆனிய அறிவு, அதன் விளக்கம் போன்றவற்றிலும் பிரசித்தி பெற்றிருந்தார்கள். தபூக் போரைத் தவிர அனைத்துப் போர்களிலும் நபியவர்களுடன் கலந்துகொண்ட இவர்களை அப்போரின் போது மதீனாவிற்குப் பிரதிநிதியாக நபியவர்கள் நியமித்தார்கள்.

---

(1) ஹிஜ்ரத்தின் போது நபியவர்களின் விரிப்பில் அலீ (ரலி) அவர்கள் தூங்கிய சம்பவம் பரவலாக வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ளன. எனினும் அறிவிப்பாளர் வரிசை அடிப்படையில் இது பலவீனமானது. அதில் இடம்பெறும் உஸ்மான் அல்ஜஸரீ என்பவர் ஹதீஸ்கலை அறிஞர்களால் விமர்சிக்கப்பட்டவர் என்ற காரணத்தால் இது பலவீனமானது என்று அல்பானீ, அஹ்மத் ஷாகிர், ஷுஐப் அல்அர்னாஊத் போன்ற அறிஞர்கள் கூறியுள்ளனர். எனினும் ஹாபிழ் இப்னு ஹஜர் (ரஹ்) அவர்கள் இச்சம்பவம் ஹஸன் எனும் தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். (மொழிபெயர்ப்பாளர்)

இவர் சுவனத்தைக் கொண்டு நற்செய்தி சொல்லப்பட்டவராக உள்ளதுடன், மு∴மின்களின் தலைவராகவும் நான்காம் கலீபாவாகவும் மதீனாவில் உஸ்மான் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்ட பின் ஹி. 35ல் பதவிப்பிரமாணம் செய்யப்பட்டார்கள். கூபா நகரைத் தனது தலைமையகமாக எடுத்து 5 வருடங்களும் 3 மாதங்கள் ஆட்சி செய்தார்கள். (1) அரசியல் ஸ்திரத்தன்மை அற்ற காலமாக இவரது ஆட்சிக்காலம் வர்ணிக்கப்படுகிறது.

பின்னர் கூபாப்பள்ளியில் அதிகாலைத் தொழுகை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது கவாரிஜ் (புரட்சிக்காரர்)களில் ஒருவன் அலீ (ரலி) அவர்களைக் குத்திக் கொலை செய்தான். ஹி 40ம் ஆண்டு ரமழான் மாதம் (கி.பி. 661ல்) இவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) பட்டுத்துணி, தங்கம் ஆகியன ஆண்கள் அணிவது தடைசெய்யப்பட்டுள்ளதை இந்நபிமொழி தெளிவு படுத்துகின்றது. எனவே அவர்கள் அவ்விரண்டையும் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். ஏனெனில்

---

(1) அலீ (ரலி) அவர்களது ஆட்சிக்காலம் 4 வருடங்களும் 9 மாதங்கள் எனவும் வரலாற்று நூல்களில் கூறப்பட்டுள்ளன. ஏனெனில் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹி. 35 துல்ஹஜ் மாதம்தான் 24ல் ஷஹீதாக்கப்பட்டார்கள். அதற்கு மறுதினம் இவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். அலீ (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டது ஹி. 40 ரமழான் மாதம். அதனடிப்படையில் 4 வருடங்கள் 9 மாதங்கள்தான் அவர்களுடைய ஆட்சிக்காலமாக உள்ளது. பார்க்க : தாரீகுத்தபரீ, உஸதுல் ∴காபஹ். (மொழிபெயர்ப்பாளர்).

பெண்களின்றி (ஆண்கள்) அவ்விரண்டையும் அணிவது தற்பெருமை, கர்வம் உண்டாகி ஆடம்பரத்தையும் வீண் விரயத்தையும் வெளிக்காட்டுகிறது.

(2) முஸ்லிம் பெண்ணுக்கு இஸ்லாம் பட்டு அணியவும், தங்கம் அணியவும் அனுமதித்துள்ளது. ஏனெனில் அவ்விரண்டும்தான் அவளுடைய அலங்காரத்தின் அடையாளமாகும். வீண் விரயம் இல்லாமல் நடுநிலையாக அவள் தன்னை அலங்கரித்துக் கொள்வாள்.

(3) ஆடை அணிகலன்கள் உட்பட வாழ்கையின் அனைத்து விடயங்களிலும் இஸ்லாமிய சட்டங்களைக் கடைபிடித்து, வீண் விரயம், பெருமை போன்றவற்றிலிருந்து தூரமாவது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கடமையாகும்.

**٣٦- عَنْ أَبِيْ أُمَامَةَ الْبَاهِلِيِّ، قَالَ: قُلْتُ: يَا رَسُوْلَ اللّٰهِ! مُرْنِيْ بِأَمْرٍ يَنْفَعُنِي اللّٰهُ بِهِ؛ قَالَ: "عَلَيْكَ بِالصِّيَامِ؛ فَإِنَّهُ لاَ مِثْلَ لَهُ".**

(سنن النسائي، رقم الحديث ٢٢٢١، قَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(36) அல்லாஹ்வின் தூதரே! அல்லாஹ் எனக்குப் பயனளிக்கக்கூடிய ஒரு விடயத்தை எனக்கு ஏவுங்கள்

என்று கேட்டேன். அதற்கு நபியவர்கள் 'நீ நோன்பைப் பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள், ஏனெனில் அதற்கு நிகரில்லை' என்று பதிலளித்தார்கள்.

அறிவிப்பவர் : அபூ உமாமா அல்பாஹிலீ (ரலி).

ஆதாரம் : நஸாஈ 2221. அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**☞அறிவிப்பாளர் பற்றி :**

அபூ உமாமா என்ற புனைப்பெயரால் அறியப்படும் ஸு தைய் பின் அஜ்லான் பின் வஹ்ப் அல்பாஹிலீ என்பவர் உலகப்பற்றில்லாச் சிறந்த நபித்தோழராவார். இறைவழியில் போரிடுவதை அதிகம் விரும்பும் இவர் எந்தவொரு போரிலிருந்தும் பின்வாங்காமல் நபியவர்களுடன் கூடவே இருந்தார்கள். நபியவர்களின் ஏவலுக்கமைய தனது தாய்க்குப் பணிவிடை செய்வதற்காக பத்ருப்போரில் கலந்துகொள்ளவில்லை, தவிர மற்ற எந்தப்போரிலிருந்தும் விலகியிருக்கவில்லை. அதேபோன்று கலீபாக்களின் காலத்திலும் அனைத்துப் போர்களிலும் கலந்து கொண்டார்கள். இவர்கள் அறிவித்த 250 நபிமொழிகள் கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளன. ஸிரியாவில் வசித்து வந்ததுடன் அங்குள்ள ஹிம்ஸ் எனும் ஊரில் ஹி. 81ல் மரணித்தார்கள்.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) நோன்பு இஸ்லாத்தின் முக்கிய வணக்கங்களிலுள்ளது. எனவே முஸ்லிம் அதில் கரிசனை எடுப்பது அவசியமாகும்.

(2) முஸ்லிம் அதிகம் நோன்பு நோற்பதை இந்நபிமொழி தூண்டுவதுடன், அதனை நிறைவேற்றும் போது ஏற்படும் கஷ்டங்களை எளிதாக்கின்றது.

(3) அல்லாஹ்வுடைய பொருத்தத்தையும், கூலியையும் அடைய சிறந்த வழியாக நோன்பு கணிக்கப்படுகிறது. ஏனெனில் பொறுமையான நோன்பாளிக்கு அவன் மட்டில்லாக் கூலி வழங்குகிறான்.

**٣٧- عَنْ أَبيْ هُرَيْرَةَ ﷺ عَنِ النَّبيِّ ﷺ قَالَ: "إِنَّ الدِّينَ يُسْرٌ وَلَنْ يُشَادَّ الدِّينَ أَحَدٌ إِلاَّ غَلَبَهُ؛ فَسَدِّدُوا وَقَارِبُوا وَأَبْشِرُوا وَاسْتَعِينُوا بِالْغَدْوَةِ وَالرَّوْحَةِ وَشَيْءٍ مِنْ الدُّلْجَةِ".**

(صحيح البخاري، رقم الحديث ٣٩، وصحيح مسلم، رقم الحديث ٧٦ - (٢٨١٦)، واللفظ للبخاري).

(37) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ‘நிச்சயமாக இந்த மார்க்கம் எளிதானது. இம்மார்க்கத்தை எவரும் (தமக்கு) சிரமமானதாக ஆக்கினால், அவரை அது மிகைத்துவிடும். எனவே, நடுநிலைமையையே

மேற்கொள்ளுங்கள். இயன்றவற்றைச் செய்யுங்கள் நற்செய்தியையே சொல்லுங்கள் காலையிலும் மாலையிலும் இரவில் சிறிது நேரமும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள்'.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 39, முஸ்லிம் 2816. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) இஸ்லாம் அனைத்து விடயங்களிலும் நடுநிலையைக் கடைபிடிக்கும் மார்க்கமாகும். அதில் தீவிரப் போக்கோ கடும் என்னிப்போ கிடையாது.

(2) இஸ்லாமிய விடயங்கள், வணக்கங்களில் ஒருவர் ஆழமாகச் சென்று, மென்மை நடுநிலையைக் கடைபிடிக்காமல் விட்டால் அதனை அவனால் நிறைவேற்ற மற்றும் தொடராக நிறைவேற்ற முடியாமல் போய்விடும்.

(3) வணக்கங்கள், அழைப்புப்பணி, ஒழுக்கம், கற்பித்தல், நடவடிக்கை மற்றும் மார்க்க, உலக அனைத்து

விடயங்களிலும் இஸ்லாத்தின் வழிமுறை நடுநிலையைக் கடைபிடிப்பதாகும்.

**٣٨- عَنْ عَبْدِ اللّٰهِ بْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا قَالَ: تَجَشَّأَ رَجُلٌ عِنْدَ النَّبِيِّ ﷺ؛ فَقَالَ: "كُفَّ جُشَاءَكَ عَنَّا؛ فَإِنَّ أَطْوَلَكُمْ جُوْعًا يَوْمَ الْقِيَامَةِ، أَكْثَرُكُمْ شِبَعًا فِيْ دَارِ الدُّنْيَا".**

(سنن ابن ماجه، رقم الحديث ٣٣٥٠، وجامع الترمذي، رقم الحديث ٢٤٧٨، واللفظ لابن ماجة، وقال الإمام الترمذي عن هذا الحديث بأنه: حسن غريب، وقال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث بأنه: حسن).

(38)நபி (ஸல்) அவர்கள் முன்னிலையில் ஒருவர் ஏப்பம் விட்டார். அப்போது நபி (ஸல்) அவர்கள் 'உன்னுடைய ஏப்பத்தைக் எங்களை விட்டும் கட்டுப்படுத்திக்கொள். ஏனெனில் இவ்வுலகில் உங்களில் அதிகம் வயிறு நிரம்பியவரே நாளை மறுமையில் அதிகம் பசியுடன் காணப்படுவார்' என்றார்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி).

ஆதாரம் : திர்மிதீ 2478, இப்னு மாஜா∴ 3350 (இவ்வார்த்தை இப்னு மாஜா∴விலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் கரீப் எனும் தரத்திருள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ்

அல்பானீ அவர்கள் இது ஹஸன் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**🖊ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அப்துல்லாஹ் பின் உமர் பின் கத்தாப் (ரலி) சிறந்த நபித்தோழராவார். இவர் பருவமடைய முன், தன் தந்தையுடனே இஸ்லாத்தை ஏற்று மதீனாவிற்கு ஹிஜ்ரத் பயணம் மேற்கொண்டவர். கந்தக் யுத்தத்தைத் தொடர்ந்து நடைபெற்ற அனைத்து யுத்தங்களிலும் கலந்து கொண்டார். எகிப்து, ஸிரியா, இராக், பஸரா, பாரசீகம் போன்ற இஸ்லாமிய பெரும்வெற்றிகளில் இவருக்கும் பங்குண்டு. இவர் அதிக துணிச்சலுள்ளவராக இருந்ததுடன், நபித்தோழர்களிலுள்ள பிரபல அறிஞர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார். நபிகளாரைத் தொட்டும் 2630 ஹதீஸ்களை அறிவித்திருக்கின்றார். வணக்கத்திலும் பேணுதலிலும் முன்னுதாரணம் கூறப்பட்டவர். தனது 86ம் வயதில் ஹிஜ்ரி 73ம் ஆண்டு மரணமடைந்தார்.

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) மக்கள் முன்னிலையில் சத்தமிட்டு ஏப்பம் விடுவது அவமரியாதையாகும். அது (மக்களால்) வெறுக்கப்படும் ஓசையென்தால் அதனைத் தவிர்ந்து கொள்வது அவசியமாகும்.

(2) ஒரு முஸ்லிம் உணவு, பாணங்களை அதிகம் உட்கொள்ளக் கூடாது. ஏனெனில் அது உற்சாகம், கற்றல், வேலை செய்தல், வணக்கங்கள் இன்னும்

நற்செயல்கள் அனைத்தையும் விட்டு அவனது கவனத்தைத் திருப்புகின்றது.

(3) ஒரு மனிதனின் மதிப்பு அவனது சிந்தனை, செயல், உற்பத்தி ஆகியவற்றில்தான் உள்ளது. உணவு, பாணம், தூக்கத்தில் அல்ல.

(4) வறுமையிலும், பிச்சைத் தொழிலிலும் விழாமலிருக்க, ஒரு முஸ்லிம் தனது உணவு பாணங்களுக்காக செய்யும் செலவில் நடுநிலையைக் கடைபிடிப்பது அவசியமாகும்.

**٣٩- عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: "اعْتَدِلُوْا فِيْ السُّجُوْدِ، وَلاَ يَبْسُطْ أحَدُكم ذِرَاعَيْهِ انْبِسَاطَ الْكَلْبِ".**

(صحيح البخاري، رقم الحديث٨٢٢، وصحيح مسلم، رقم الحديث ٢٣٣- (٤٩٣)، واللفظ للبخاري).

(39) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஸஜ்தாவில் நடுநிலையைக் கடைபிடியுங்கள். உங்களில் எவரும் நாய் விரிப்பதைப் போல் கைகளை விரிக்கக் கூடாது.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : புஹாரி 822, முஸ்லிம் 493. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 6ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) ஸுஜூதில் நடுநிலையைக் கடைபிடிப்பதை இந்நபிமொழி தெளிவுபடுத்துகின்றது. தொழக்கூடியவர் ஸுஜூதின் போது ஒருபக்கம் சாயாமலும், வலது இடது பக்கங்களுக்குத் திரும்பாமலும், நேராக செய்யவேண்டும்.

(2) ஸுஜூது செய்பவர் தனது இரு உள்ளங்கைகளையும் தரையில் வைத்து, இரு முன்னங்கைகளையும் வலது இடது பக்கங்களிலுள்ளவர்களுக்கு நோவினையில்லாமல் தரையை விட்டும் உயர்த்திக் கொள்ளவேண்டும்.

(3) உள்ளச்சத்துடனும் அமைதியாகவும் தொழும் சரியான முறையைக் கற்றுக்கொள்ள தனது முயற்சியையும் நேரத்தையும் செலவிடுவது ஒவ்வோர் முஸ்லிமுக்கும் அவசியமாகும்.

**٤٠- عَنْ طَارِقِ بْنِ أَشْيَمَ اَلْأَشْجَعِيْ ﷺ قَالَ: كَانَ الرَّجُلُ إِذَا أَسْلَمَ عَلَّمَهُ النَّبِيُّ ﷺ اَلصَّلاَةَ، ثُمَّ أَمَرَهُ أَنْ يَدْعُوْ بِهَؤُلاَءِ الْكَلِمَاتِ: "اَللَّهُمَّ اغْفِرْ لِيْ، وَارْحَمْنِي، وَاهْدِني، وَعَافِنِيْ، وَارْزُقْنِيْ".**

(صحيح مسلم، رقم الحديث ٣٥- (٢٦٩٧)،).

(40) ஒருவர் புதிதாக இஸ்லாத்தைத் தழுவினால் அவருக்கு நபி (ஸல்) அவர்கள் தொழுகையைக்

கற்றுக்கொடுப்பார்கள். பிறகு 'அல்லாஹும்ம:ஃக்பிர்லீ வர்ஹம்னீ, வஹ்தினீ, வஆபினீ, வர்ஸுக்னீ' எனும் வாக்கியங்களைச் சொல்லிப் பிரார்த்திக்குமாறு கட்டளையிடுவார்கள்.

அறிவிப்பவர் : ஸஃத் பின் தாரிக் அல்அஷ்ஜஈ (ரலி)

ஆதாரம் : முஸ்லிம் 2697.

**பொருள் :**

இறைவா! என்னை மன்னித்து விடு, எனக்குக் கிருபை செய், எனக்கு நேர்வழி காட்டிடு, எனக்கு சுகம் கொடு, எனக்கு வாழ்வாதாரத்தை வழங்கு.

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

தாரிக் பின் அஷ்யம் பின் மஸ்ஊத் அல் அஷ்ஜஈ அல்கூபீ என்பவர் ஒரு நபித்தோழராவார். இவர் அபூ மாலிக் ஸஃத் பின் தாரிக் என்பவரின் தந்தையாவார். கூபாவாசியாகக் கணிக்கப்படும் இவரைத் தொட்டும் இவரது மகன் நபிமொழிகளை அறிவித்துள்ளார்கள். இவர்கள் அறிவித்த நான்கு நபிமொழிகள் மாத்திரமே கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளன.

**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) இந்தப் பிரார்த்தனை ஒரு முஸ்லிமின் ஈருலக வாழ்கையின் மகிழ்ச்சி, பாதுகாப்பு, ஆரோக்கயம் ஆகியவற்றின் காரணங்களை ஒன்று சேர்த்துள்ளன.

(2) நபியவர்கள் காட்டித் தந்த இந்தப் பிரார்த்தனையை ஓதுவதில் ஒவ்வொரு முஸ்லிமும் கரிசனையெடுக்க வேண்டும். ஏனெனில் அது அல்லாஹ்வின்பால் அவனை நெருக்கமாக்கி வைக்கும்.

(3) உளத்தூய்மையுடனும், அச்சம் ஆதரவுடனும் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதுதான் முஸ்லிமுக்கு அழகாகும்.

٤١- عَنْ أَبيْ هُرَيْرَةَ ﷺ، أَنَّ رَسُوْلَ اللّٰهِ ﷺ قَالَ: "مَنْ دَعَا إِلَى هُدًى، كَانَ لَهُ مِنَ الأَجْرِ مِثْلُ أُجُوْرِ مَنْ تَبِعَهُ، لاَ يَنْقُصُ ذَلِكَ مِنْ أُجُوْرِهِمْ شَيْئًا، وَمَنْ دَعَا إِلَى ضَلاَلَةٍ، كَانَ عَلَيْهِ مِنَ الإِثْمِ مِثْلُ آثَامِ مَنْ تَبِعَهُ، لاَ يَنْقُصُ ذَلِكَ مِنْ آثَامِهِمْ شَيْئًا".

(صحيح مسلم، رقم الحديث ١٦- (٢٦٧٤)،).

(41) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மக்களை நல்வழிக்கு அழைத்தவருக்கு அவரைப் பின் தொடர்ந்தவர்களின் நன்மைகளைப் போன்றது உண்டு. அது அ(வ்வாறு பின் தொடர்ந்த)வர்களின் நன்மையில் எதையும் குறைத்து விடாது. தவறான வழிக்கு மக்களை அழைத்தவருக்கு அவரைப் பின் தொடர்ந்தவர்களுக்குரிய

பாவங்களைப் போன்றது உண்டு. அது அவர்களது பாவத்தில் எதையும் குறைத்துவிடாது,

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 2674.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) இஸ்லாத்தையும் அதன் அறிவுரைகளையும் அறிவுடனும் தெளிவுடனும் பரப்புவதன் முக்கியத்துவத்தை இந்நபிமொழி தெளிவு படுத்துகின்றது.

(2) அழைப்புப்பணியும், இஸ்லாமியப் போதனையும் சமூகத்திலும் சூழலிலும் தாக்கம் செலுத்தும் மிகச்சிறந்த உபகரணங்களைக் கொண்டும், அழகிய முறைகளைக்கொண்டுமே இருக்கவேண்டும்.

(3) அடிப்படைக் கொள்கை, மார்க்க சட்டங்கள், நற்குணங்கள், அழகிய விழுமியங்கள் போன்றவற்றை சீர்குலைக்கும் அனைத்துக் கருமங்களின் பக்கம் (மக்களை) அழைப்பதை இந்நபிமொழி கடுமையாக எச்சரிக்கின்றது.

٤٢- عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ رَضِيَ اللّٰهُ عَنْهُمَا عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: "لاَ يُقِيْمُ الرَّجُلُ الرَّجُلَ مِنْ مَجْلِسِهِ، ثُمَّ يَجْلِسُ فِيْهِ".

(صحيح البخاري، رقم الحديث ٦٢٦٩، وصحيح مسلم، رقم الحديث ٢٧ - (٢١٧٧)، واللفظ للبخاري).

(42) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : இன்னொரு மனிதர் உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்து அவரை எழுப்பிவிட்டு உட்கார வேண்டாம்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி).

ஆதாரம் : புஹாரி 6269, முஸ்லிம் 2177. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 38ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) மன்றங்களில் கடைபிடிக்க வேண்டிய இஸ்லாம் அனுமதித்த ஒழுக்கங்களைப் பேணுவது ஒவ்வொரு முஸ்லிம் மீதும் கடமையாகும். எனவே ஒருவர் மற்றவரைத் துன்புறுத்தலாகாது.

(2) முஸ்லிமின் உரிமைகளைக் குறைத்து மதிப்பிடாமலிருப்பது மன்ற ஒழுக்கங்களிலுள்ள தென

இந்நபிமொழி தெளிவுபடுத்துகின்றது. ஏனெனில் அவ்வாறு நடந்து கொள்வது சமூகத்தில் வெறுப்பு உட்பகை போன்றவற்றிற்கு வழிவகுக்கின்றது.

**٤٣- عَنْ أَبِيْ قَتَادَةَ ﷺ قَالَ: قَالَ نَّبِيُّ اللّٰهِ ﷺ: "اَلرُّؤْيَا الصَّالِحَةُ مِنَ اللّٰهِ، وَالْحُلُمُ مِنَ الشَّيْطَانِ؛ فَإِذَا حَلَمَ أَحَدُكُمْ حُلُمًا يَخَافُهُ؛ فَلْيَبْصُقْ عَنْ يَسَارِهِ، وَلْيَتَعَوَّذْ بِاللّٰهِ مِنْ شَرِّهَا؛ فَإِنَّهَا لاَ تَضُرُّهُ".**

(صحيح البخاري، رقم الحديث ٣٢٩٢، وصحيح مسلم، رقم الحديث ٢ - (٢٢٦١)، واللفظ للبخاري).

(43) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நல்ல கனவு அல்லாஹ்விடமிருந்து வருவதாகும் கெட்ட (அச்சுறுத்தும்) கனவுகள் ஷைத்தானிடமிருந்து வருவனவாகும். உங்களில் எவரேனும் அச்சுறுத்தும் தீய கனவைக் கண்டால் அவர் தன் இடப் பக்கத்தில் எச்சில் துப்பட்டும். அல்லாஹ்விடம் அக்கனவின் தீங்கிலிருந்து பாதுகாப்புக் கோரட்டும். ஏனெனில், (இப்படிச் செய்தால்) அது அவருக்குத் தீங்கு செய்ய முடியாது.

அறிவிப்பவர் : அபூ கதாதா (ரலி).

ஆதாரம் : புஹாரி 3292, முஸ்லிம் 2261. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

**🖉 ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அபூ கதாதா பின் ரிப்இய் அல் அன்ஸாரீ என்பவர் கண்ணியமிக்க ஒரு நபித்தோழராவார். பல யுத்தங்களில் பங்குபற்றிய இவர் நபி (ஸல்) அவர்களுக்கு பயணத்தின் போது காவல் காப்பவராக இருந்தார்கள். பாரசிகத்தில் போர் புரிய உமர் (ரலி) அவர்கள் இவரை அனுப்பினார்கள். தனது கையாலே அவர்களின் மன்னரைக் கொன்றார்கள்.

இவருடைய மரணத் திகதி, இடங்களில் கருத்துவேறுபாடுள்ளது. ஹி. 38ல் கூபாவில் மரணித்து, அலீ (ரலி) அவர்கள் இவருக்குத் தொழுகை நடத்தினார்கள். ஹி. 54ல் மதீனாவில் மரணித்தார் என்று மற்றொரு கருத்தும், வேறு சில கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன.

## ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) கனவின் சில ஒழுக்கங்களை இந்நபிமொழி தெளிவுபடுத்துகின்றது. ஒரு முஸ்லிம் கனவில் அவன் வெறுக்கும் ஒன்றைக் கண்டால் அதை யாரிடமும் கூறாமல், விரட்டப்பட்ட ஷைத்தான் மற்றும் அவன் கண்ட கனவுகளின் தீங்கை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடி, இடது பக்கம் திரும்பி மூன்று முறை உமிழவேண்டும். அவன் கண்ட கனவினால் எத்தீங்கும் ஏற்படாமலிருக்கவும், அவனது உள்ளம் கலங்காமல், தடுமாறாமல் அமைதியாக இருக்கவும் (இவ்வாறு செய்யவேண்டும்).

(2) முஸ்லிம், பொதுவாக அனைத்து விடயங்களிலும் குறிப்பாக கனவு விடயத்திலும் ஷைத்தானின் ஊசலாட்டங்களைப் பொருட்படுத்தாமல் இருப்பது அவசியமாகும். ஏனெனில் ஷைத்தான் முஸ்லிமுக்கு தீங்கிழைக்க ஆர்வமுள்ளவன்.

٤٤- عَنْ أَبِـيْ هُرَيْـرَةَ ﷺ عَـنِ الـنَّبِيِّ ﷺ قَـالَ: "مَـن صَـامَ رَمَضَـانَ إِيْمَانًـا وَاحْتِسَابًا؛ غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ، وَمَنْ قَامَ لَيْلَةَ الْقَدْرِ إِيْمَانًا وَاحْتِسَابًا؛ غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ ".

(صحيح البخاري، رقم الحديث ٢٠١٤، وصحيح مسلم، رقم الحديث ١٧٥ - (٧٦٠)، واللفظ للبخاري).

(44) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் இறைநம்பிக்கையுடனும், நன்மையை எதிர்பார்த்தவராகவும் ரமழானில் நோன்பு நோற்கின்றாரோ அவருடைய முந்திய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிடும். மேலும் யார் இறைநம்பிக்கையுடனும், நன்மையை எதிர்பார்த்தவராகவும் கண்ணியமிக்க இரவில் (லைலதுல் கத்ர்) நின்று வணங்குகிறாரோ அவருடைய முந்திய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிடும்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 2014, முஸ்லிம் 760. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) ஏனைய வணக்கங்களைப் போலவே ரமழானில் நோன்பு வைத்தலிலும், லைலதுல் கத்ருடைய இரவில் நின்றுவணங்குவதிலும் உளத் தூய்மையின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுகிறது.

(2) ரமழானில் நோன்பு வைத்தல், லைலதுல் கத்ருடைய இரவில் நின்றுவணங்குதல் ஆகியவற்றின் சில சிறப்புக்களை இந்நபிமொழி விளக்குகின்றது.

(3) இந்நபிமொழியில் கூறப்பட்டுள்ள பாவமன்னிப்பு சிறிய பாவங்களுக்கு மாத்திரமே. ஏனெனில் பெரிய பாவங்கள் தூய்மையான தௌபாவின் மூலமே மன்னிக்கப்படும்.

**٤٥- عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا، قَالَتْ: سُرِقَ لَهَا شَيْءٌ؛ فَجَعَلَتْ تَدْعُوْ عَلَيْهِ؛ فَقَالَ لَهَا رَسُوْلُ اللهِ ﷺ: "لاَ تُسَبِّخِيْ عَنْهُ".**

(سنن أبي داود، رقم الحديث ٤٩٠٩، و قَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه حسن).

(45) அன்னை ஆஇஷா (ரலி) அவர்களுடைய ஒரு பொருள் திருடப்பட்ட போது அவனைத் திட்ட ஆரம்பித்தார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் (நீர் அவனைத் திட்டுவதன் மூலம்) அவனுடைய (பாவச்சுமையைக்) குறைத்துவிடாதீர்.

அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி).

ஆதாரம் : அபூ தாவூத் 4909. அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஹஸன் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

### ✍ ஹதீஸ் அறிவிப்பாளர்:

உம்முல் முஃமினீன் (நம்பிக்கையாளர்களின் தாய்) ஆஇஷா (ரலி) அவர்கள் (இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நெருங்கிய தோழரும், அருமை நண்பருமான) அபூபக்கர் (ரலி) அவர்களின் செல்வப் புதல்வியாவார். நபியவர்கள் ஹிஜ்ரதுக்கு முன் இவர்களைத் திருமணம் செய்து, (ஹிஜ்ரதுக்குப் பின்) மதீனாவில் அன்னையாருக்கு 9 வயதிருக்கும் போது உறவுகொண்டார்கள். நபியவர்கள் மரணிக்கும் போது அன்னாருக்கு வயது 18 ஆகும். மக்களில் மிகச் சிறந்த சட்டவல்லுனராகவும், அறிவாளியாகவும், அழகான கருத்துள்ளவராகவும் திகழ்ந்தார்கள், மேலும் கொடை வழங்குவதில் முன்னுதாரணம் கூறப்படக்கூடியவராகவும் இருந்தார்கள். இறைத்தூதர் (ஸல்) (அவர்களுடன் மிக நீண்ட காலங்கள் வாழ்ந்திருந்ததன் காரணமாக) அவர்களைத் தொட்டும் அதிக நபிமொழிகளை அறிவிப்புச்

செய்தார்கள். அவர்கள் அறிவித்த நபிமொழிகளின் எண்ணிக்கை 2210 ஆகும்.

அன்னையவர்கள் ஹிஜ்ரி 57 அல்லது 58 ல் ரமழான் அல்லது ஷவ்வால் மாதம் 17ம் நாள் செவ்வாய்க்கிழமையன்று மதீனாவில் மரணித்து பகீஉல் கர்கதில் அடக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களுடைய ஜனாஸாத் தொழுகையை (அவர்களுடைய வஸிய்யத்தின் பிரகாரம்) அபூ ஹுரைரா (ரலி) நடத்தினார்கள்.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) அநீதியிழைக்கப்பட்டவர் அநீதியிழைத்தவருக்கு ஏசினால் அல்லது தரக்குறைவாகப் பேசினால் அவர் (மறுமையில்) தனக்குக் கிடைக்கவிருந்த வெகுமதியை (இவ்வுலகிலேயே) பெற்றுக்கொண்டவராகிவிடுவார். எனவே அவனை ஏசுவதோ சபிப்பதோ கூடாது.

(2) அநீதியிழைக்கப்பட்டவர் அநீதியிழைத்தவருக்கெதிராக வரம்புமீறாமல் பிரார்த்திக்க முடியும்.

(3) திருடன் அல்லது அநியாயக் காரனுக்கெதிராகப் பிரார்த்திப்பது அவர்களுடைய தண்டனையைக் குறைக்க வழிவகுக்கும். எனவே அவ்வாறு பிரார்த்திக்காமலிருப்பதே சிறந்தது.

٤٦- عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا ، قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ ﷺ:
"اِنْهَكُوْا الشَّوَارِبَ، وَأَعْفُوْا اللِّحَى".

(صحيح البخاري، رقم الحديث ٥٨٩٣، وصحيح مسلم، رقم الحديث ٥٢- (٢٥٩)، واللفظ للبخاري).

(46) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மீசையை நன்கு ஒட்டக் கத்தரியுங்கள். தாடியை வளரவிடுங்கள்.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி).

ஆதாரம் : புஹாரி 5893, முஸ்லிம் 259. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 38ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) மீசையைக் கத்தரிப்பதை இந்நபிமொழி தூண்டுகின்றது. சாப்பிடுபவருக்கு இடையூறு செய்யாமலும், அதில் அழுக்குகள் படியாமலும் இருக்கவே (இவ்வாறு கத்தரித்துக் கொள்ள வேண்டும்).

(2) தாடியை அவ்வாறு விட்டுவிடுவது அவசியமாகும். அதைக் கத்தரிப்பதன் மூலமோ (மழிப்பது போன்று) வேறு முறைகள் மூலமோ கையாடல் செய்யக் கூடாது. ஓரிரு முடிகள் நீளத்திலோ அகலத்திலோ அலங்கோலமாக நீண்டுகொண்டிருந்தாலே தவிர. அச் சந்தர்ப்பத்தில் தாடியை அழகுபடுத்துவதற்காக அந்த ஓரிரு முடிகளை மாத்திரம் எடுக்கலாம்.

(3) உளத்தூய்மையுடனும் திருப்தியுடனும் அல்லாஹ், ரஸூலுக்கு வழிப்படுவதே ஒரு முஸ்லிமின் மகிழ்ச்சியிலுள்ளதாகும்.

٤٧- عَنْ أَبيْ هُرَيْرَةَ ﷺ أن رَسُوْلَ اللّٰهِ ﷺ قَالَ: "لَعَنَ اللّٰهُ الْيَهُوْدَ وَالنَّصَارَى؛ اِتَّخَذُوْا قُبُوْرَ أَنْبِيائِهِمْ مَسَاجِدَ".

(صحيح مسلم، رقم الحديث٢١ - (٥٣٠)، وصحيح البخاري، رقم الحديث ٣٤٥٣، واللفظ لمسلم).

(47) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யூத, கிறிஸ்தவர்களை அல்லாஹ் சபிப்பானாக! அவர்கள் தமது இறைத்தூதர்களின் மண்ணறைகளை வணக்கஸ்தலங்களாக எடுத்துக் கொண்டார்கள்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 3453, முஸ்லிம் 530. (இவ்வார்த்தை முஸ்லிமிலிருந்து).

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) அல்லாஹ்விற்கு இணைகற்பிக்கும் வாயிலை அடைக்குமுகமாக நபிமார்கள், இறைநேசர்கள், நல்லடியார்களை கண்ணிப்படுத்துவதில்

அளவுகடந்து செல்வதை இந்நபிமொழி எச்சரிக்கின்றது.

(2) மண்ணறைகளை வணக்கஸ்தலங்களாக எடுப்பது தீய செயலாகும். (அதன் மூலம்) அல்லாஹ்வின் சாபத்தைத் தேடிக்கொள்கிறான்.

٤٨- عَنْ زَيْدِ بْنِ حَارِثَةَ مَوْلَى رَسُوْلِ اللهِ ﷺ أَنَّهُ سَمِعَ رَسُوْلَ اللهِ ﷺ يَقُوْلُ: "مَنْ قَالَ: أَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ الَّذِيْ لاَ إِلَهَ إِلاَّ هُوَ الْحَيُ الْقَيُّوْمُ وَأَتُوْبُ إِلَيْهِ، غَفَرَ اللهُ لَهُ، وَإِنْ كَانَ قَدْ فَرَّ مِنَ الزَّحْفِ".

(جامع الترمذي، رقم الحديث ٣٥٧٧،سنن أبي داود، رقم الحديث ١٥١٧، واللفظ للترمذي، قال الإمام الترمذي عن هذا الحديث: بأنه حديث غريب، وقال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(48) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் ‘அஸ்தஃபிருல்லாஹல் அளீமல்லதீ லா இலாஹ இல்லாஹுவல் ஹய்யுல் கைய்யூம் வஅதூபு இலைஹி’ என்று கூறுகிறாரோ அவர் போர்க்களத்தை விட்டும் விரண்டோடியிருந்தாலும் அவருக்கு அல்லாஹ் மன்னிப்பு வழங்குவான்.

அறிவிப்பவர்: ஸைத் பின் ஹாரிஸ் (ரலி).

ஆதாரம்: அபூ தாவூத் 1517, திர்மிதீ 3577, (இவ்வார்த்தை திர்மிதீயிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி கரீப் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**பொருள்:**

மகத்தான இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடுகிறேன். அவன் எத்தகையவனென்றால், உண்மையாக வணங்கப்படக்கூடிய நாயன் உயிருள்ள நிலையான அவனைத்தவிர யாருமில்லை. அவனிடமே நான் மீளுகிறேன்.

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

ஸைத் பின் ஹாரிஸ் அல்கல்பீ என்பவர் கண்ணியமிக்க ஒரு நபித்தோழரும் நபியவர்களால் உரிமையிடப்பட்டவருமாவார். நபியவர்களின் பராமரிப்பில் இவர்கள் வளர்ந்ததுடன், அவர்களின் விருப்பத்திற்குரியவராகவும் திகழ்ந்தார்கள். பத்ர், உஹத், கஃந்தக், ஹுதைபியா, கைஃபர் போன்ற யுத்தங்களில் கலந்து கொண்டதுடன் பிரபலமான அம்பெறியும் வீரர்களில் ஒருவராகவும் இருந்தார். நபி (ஸல்) இவரை பல சிறு படைகளுக்குத் தலைமை தாங்கி அனுப்பியுள்ளார்கள்.

நபியவர்கள் தாஇஃப் சென்ற போது ஸைத் பின் ஹாரிஸும் கூடவே இருந்தார்கள். அங்கு

தாஇ∴ப்வாசிகள் நபியவர்களை நிர்க்கதிக்குள்ளாக்கி, கற்களால் எறிந்து, அன்னாருடைய சங்கைமிக்க இரு கால்களிலிருந்தும் இரத்தம் வழிய வைத்தார்கள். (இச்சந்தர்ப்பத்தில்) ஸைத் பின் ஹாரிஸ் தன்னுயிரை அர்ப்பணித்து நபியவர்களைக் காத்தார்கள். இதனால் அவருடைய தலையில் காயம் ஏற்பட்டது.

ஹி. 8ல் நடைபெற்ற முஅத்தா போரில் ஸைத் பின் ஹரிஸ் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். இவர்கள் ஷஹீதாக்கப்பட்ட செய்தி நபியவர்களை எட்டிய போது மிகவும் வேதனைப்பட்டு அவருடைய பாவமன்னிப்புக்காக அதிகம் பிரார்த்தித்தார்கள்.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) மேற்கண்ட வார்த்தையைப் பயன்படுத்தி பாவமன்னிப்புத் தேடுவதன் சிறப்பை இந்நபிமொழி கூறுகிறது. எனவே இந்த இஸ்தி∴பாரை அதிகம் ஓத வேண்டும்.

(2) தான் பாவமன்னிப்புத் தேடும் போது அல்லாஹ்வுடன் உண்மையாளனாக இருப்பது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

(3) மக்களுடன் சம்பந்தப்படாத பெரிய பாவங்களை அல்லாஹ் மன்னிப்பான் என்பதை இந்த மகத்தான இஸ்தி∴பார் உணர்த்துகிறது. உதாரணமாக: நிராகரிப்பாளர்களுடன் போர் புரியும் போது இடைநடுவில் விரண்டோடுவதைப் போன்றது.

**٤٩- عَنْ أَنَسٍ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: "سَوُّوْا صُفُوفَكُمْ؛ فَإِنَّ تَسْوِيَةَ الصُّفُوْفِ مِنْ إِقَامَةِ الصَّلَاةِ".**

(صحيح البخاري، رقم الحديث ٧٢٣، وصحيح مسلم، رقم الحديث ١٢٤- (٤٣٣)، واللفظ للبخاري).

(49) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்கள் அணிகளை நோரக வைத்து சீர்செய்து கொள்ளுங்கள். ஏனெனில் அணிகளை சீர்செய்வது தொழுகையை நிலைநாட்டுவதிலடங்கும்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : புஹாரி 723, முஸ்லிம் 433. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 6ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது. )

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) (தொழுகைக்கு நிற்கும் போது) வரிசையைச் சீர்செய்து நேராக வைப்பதை இந்நபிமொழி தூண்டுகின்றது. ஏனெனில் அது தொழுகையின் பரிபூரணத் தன்மையிலுள்ளதாகும்.

(2) வரிசையைச் சீர்செய்வதென்பது ஏனைய தொழுகையாளிகளைத் துன்புறுத்துவதையோ, அவர்களுடைய தொழுகையில் உள்ளச்சத்தைக்

குழப்புவதையோ நாடவில்லை. மாறாக வரிசையில் முன், பின்னாகி நிற்காமல் (நேராக) தொழுகையாளர்களுடன் நெருக்கமாக இருப்பதாகும். நெருக்கம் என்பது ஏனைய தொழுகையாளிகளைத் துன்புறுத்துவதோ, அவர்களுடைய தொழுகையில் உள்ளச் சத்தைக் குழப்புவதோ அர்த்தமில்லை. ஏனெனில் தொழுகையில் உள்ளச்சம் என்பது அதன் கடமைகளுள் ஒன்று.

**٥٠- عَنْ مُعَاذَةَ عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا زَوْجِ النبيِّ ﷺ قَالَتْ: مُرْنَ أَزْوَاجَكُنَّ أَنْ يَسْتَطِيْبُوْا بِالْمَاءِ؛ فَإِنِّيْ أَسْتَحْيِيْهِمْ؛ فَإِنَّ رَسُوْلَ اللهِ ﷺ كَانَ يَفْعَلُهُ.**

(جامع الترمذي، رقم الحديث ١٩، وسنن النسائي، رقم الحديث ٤٦، واللفظ للترمذي، قال الإمام الترمذي عن هذا الحديث بأنه: حسن صحيح، وقال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث بأنه: صحيح ).

(50) தண்ணீரால் (மலசலத்தை) சுத்தம் செய்து கொள்ளும்படி உங்கள் கணவர்மாருக்கு ஏவுங்கள். ஏனெனில் நான் அவர்களிடம் (அதைக் கூற) வெட்கப்படுகிறேன். நபி (ஸல்) அவர்கள் அவவாறே (தண்ணீரால் சுத்தம்) செய்பவராக இருந்தார்கள்.

அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி).

ஆதாரம் : திர்மிதீ 19, நஸாஈ 46, (இவ்வார்த்தை திர்மிதீயிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**🖊ஹதீஸ் அறிவிப்பாளர்:**

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 45ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**அவர்களுடைய மாணவி முஆதா (ரஹ்) அவர்கள் :**

உம்முஸ்ஸஹ்பா∴ முஆதா பின்து அப்தில்லாஹ் அல் அதவிய்யா அல்பஸரிய்யா என்பவர் தாபிஈன்களில் ஒருவர். இவர் சிறந்த அறிவாளியாகவும், மார்க்க சட்டக்கலை வல்லுனராகவும், உலகப்பற்றில்லா வணக்கவாளியாகவும், அதிக நோன்பு இரவுத் தொழுகை பொறுமை போன்றவற்றால் அறியப்பட்டவராகவும் உள்ளார்.

ஹி. 62ல் இவருடைய கணவரான ஸிலத் பின் அஷ்யம் என்ற தாபிஈயும் அவரது மகனும் ஒரு போரில் ஷஹீதாக்கப்பட்டார்கள். இச்செய்தி அவர்களை வந்து சேர்ந்ததும் இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜஊன் என்று கூறி பொறுமையாக இருந்து, அனைத்து

முஸ்லிம் பெண்களுக்கும் நல்ல முன்மாதிரியாக இருந்தார்கள்.

இவர் அன்னை ஆஇஷா (ரலி) அவர்களின் மாணவியாக இருந்து இந்நபிமொழியை அவர்களைத் தொட்டும் அறிவித்தார்கள். ஹி. 98ல் முஆதா (ரஹ்) அவர்கள் மரணித்தார்கள். ஹி. 106ல் மரணித்ததாகவும் ஒரு கருத்துள்ளது.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) மல சலம் சுத்தஞ்செய்யும் போது தண்ணீரை மாத்திரம் பயன்படுத்தலாம் என்பதற்கு இந்நபிமொழி ஆதாரமாகவுள்ளது. ஏனெனில் அது அசுத்தத்தையும் அதன் அடையாளத்தையும் போக்குகின்றது.

(2) இஸ்லாம் பரிசுத்தமான அழகான மார்க்கமாகும். எனவே மக்களுக்குத் தீங்கிழைக்கும் அனைத்து அழுக்குகள், துர்வாடைகளை விட்டும் தூரமாகிக்கொள்வது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

(3) கற்கள், அழுக்கான திஷூ த்தாள்கள் போன்றவற்றை மலசலகூடங்கள் மற்றும் குளியலறைகளில் போடலாகாது. ஏனெனில் அவை அவ்விடங்களை அசுத்தப்படுத்துவதுடன் ஏனையோரை வெறுப்படையவும் செய்கின்றது.

٥١- عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ ﷺ قَالَ: قَالَ نبِيُّ اللّٰهِ ﷺ: "مَنْ نَسِيَ صَلاَةً أَوْ نَامَ عَنْهَا؛ فَكَفَّارَتُها أَنْ يُصَلِّيَهَا إِذَا ذَكَرَهَا".

(صحيح مسلم، رقم الحديث ٣١٥- (٦٨٤)،).

(51) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யாராவது தொழுகையை மறந்தால் அல்லது தூங்கினால் அவருக்கு நினைவு வரும் போது தொழுவதே அதற்கான பரிகாரமாகும்.

அறிவிப்பவர் : அனஸ் பின் மாலிக் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 684.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 6ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) முஸ்லிம் மறதி அல்லது தூக்கத்தால் விட்ட தொழுகைக்கான பரிகாரம் நினைவு வந்ததும் அதை நிறைவேற்றுவதாகும்.

(2) சோம்பல் பொடுபோக்கின்றி அனைத்துத் தொழுகைகளையும் அதன் நேரங்களில் நிறைவேற்றுவதில் கரிசனை எடுப்பது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

٥٢- عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا ، قَالَتْ: أَمَرَنَا رَسُوْلُ اللهِ ﷺ، أَنْ نَعُقَّ عَنِ الْغُلَامِ شَاتَيْنِ، وَعَنِ الْجَارِيَةِ شَاةً.

(سنن ابن ماجه، رقم الحديث ٣١٦٣، قال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث بأنه: صحيح).

(52) ஆண்குழந்தைக்காக இரு ஆடுகளும், பெண்குழந்தைக்காக ஓர் ஆடும் அகீகாவாக அறுத்துப் பலியிடும்படி நபி (ஸல்) அவர்கள் எங்களுக்கு ஏவினார்கள்.

அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி).

ஆதாரம் : இப்னு மாஜா∴ 3163. அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 45ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) அகீகா என்பது ஸு ன்னத்தான வணக்கம் என்பதை இந்நபிமொழி எடுத்துக்கூறுகின்றது. குழந்தை பிறந்து ஏழாவது நாளில் தந்தைக்கு வசதியிருந்தால் அந்த அகீகா பிராணியை அறுத்துப்

பலியிட வேண்டும். முடியாவிட்டால் இரண்டாம் மூன்றாம் வாரங்களில் நிறைவேற்ற வேண்டும்[1].

(2) ஒட்டகம், மாடுகளாக இருந்தாலும் அகீகாவில் கூட்டுச்சேர முடியாது.

(3) அகீகாவில் நபிவழி (ஆணுக்கு) இரு ஆடுகள், அல்லது (பெண்ணுக்கு) ஒரு ஆடு அறுப்பதுதான். மாறாக ஒட்டகம், மாடு போன்றவற்றை அகீகாவில் அறுப்பது நபிவழியல்ல.

٥٣- عَنْ أَبِيْ سَعِيْدٍ اَلْخُدْرِيِّ ﷺ أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ: "لاَ يَنْظُرُ الرَّجُلُ إِلَى عَوْرَةِ الرَّجُلِ، وَلاَ الْمَرْأَةُ إِلَى عَوْرَةِ الْمَرْأَةِ، وَلاَ يُفْضِي الرَّجُلُ إِلَى الرَّجُلِ فِيْ ثَوْبٍ وَاحِدٍ، وَلاَ تُفْضِي الْمَرْأَةُ إِلَى الْمَرْأَةِ فِي الثَّوْبِ الْوَاحِدِ".

(صحيح مسلم، رقم الحديث ٧٤- (٣٣٨)،).

(53) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஓர் ஆண் மற்றோர் ஆணின் மறைவிடத்தைப் பார்க்க வேண்டாம். ஒரு பெண் மற்றோர் பெண்ணின் மறைவிடத்தைப் பார்க்க வேண்டாம். ஒரே ஆடைக்குள் இரு ஆண்கள் சேர்ந்து படுக்கவேண்டாம். ஒரே ஆடைக்குள் இரு பெண்கள் சேர்ந்து படுக்கவேண்டாம்.

அறிவிப்பவர் : அபூ ஸஈத் அல்குத்ரீ (ரலி).

---

(1) இரண்டாம் மூன்றாம் வாரங்களில் கொடுக்கலாம் என்பது சில அறிஞர்களின் கருத்தாகும். (மொழிபெயர்ப்பாளர்)

ஆதாரம் : முஸ்லிம் 338.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 5ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது. )

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) ஆண் பெண்கள் தத்தமது மறைவிடங்களை மறைப்பது அவசியமாகும். நற்குணங்கள், மானங்களைப் பாதுகாக்கவும், பெண்ணைக் கண்ணியப்படுத்தி அவளைப் பாதுகாக்கவுமே (இவ்வாறு மறைப்பது அவசியமாகும்).

(2) கணவன் மனைவியைத் தவிர யாரும் மற்றவர்களுடைய மறைவிடங்களைப் பார்க்க முடியாது.

(3) வைத்தியம் போன்ற நிர்ப்பந்தத்திற்காகவே தவிர தனித்திருந்தாலும் மறைவிடங்களைத் திறப்பதாகாது.

**٥٤- عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا ، قَالَتْ: كَانَ النَّبِيُّ ﷺ يَقُوْلُ فِيْ سُجُوْدِ الْقُرْآنِ بِاللَّيْلِ: "سَجَدَ وَجْهِيَ لِلَّذِي خَلَقَهُ وَشَقَّ سَمْعَهُ وَبَصَرَهُ بِحَوْلِهِ وَقُوَّتِهِ".**

(جامع الترمذي، رقم الحديث ٣٥٢٤، وسنن أبي داود، رقم الحديث ١٤١٤، واللفظ للترمذي، قال الإمام الترمذي عن هذا الحديث: بأنه حسن صحيح، وقال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(54) நபி (ஸல்) அவர்கள் இரவில் (தொழும் போது) ஸஜ்தா திலாவத்தில் ‘ஸஜத வஜ்ஹிய லில்லதீ கலகஹூ வஷக்க ஸம்அஹூ வபஸரஹூ பிஹௌலிஹீ வகுவ்வதிஹீ’ என்று கூறுவார்கள்.

அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி).

ஆதாரம் : அபூ தாவூத் 1414, திர்மிதீ 3524, (இவ்வார்த்தை திர்மிதீயிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**பொருள் :**

தனது திரும்புதல் மற்றும் சக்தியின் மூலம் என்முகத்தைப் படைத்து அதில் செவிப்புலனையும் பார்வைப்புலனையும் அமைத்த இறைவனுக்கே என் முகம் பணிந்துவிட்டது.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 45ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) ஸஜ்தா திலாவதுடைய வசனத்தை ஒருவர் ஓதினால் அல்லது ஓதக்கேட்டால் அதற்காக ஸஜ்தா செய்து அதில் மேற்கண்ட தஸ்பீஹை ஓதுவது நபிவழியாகும்.

(2) அல்லாஹ் எமக்கு அருளியுள்ள அருட் கொடைகளை ஏற்றுக்கொள்வதாக இந்த தஸ்பீஹின் உள்ளடக்கம் பொதிந்துள்ளது.

٥٥- عَنِ الْبَرَاءِ ﷺ يُحَدِّثُ عَنِ النَّبِيِّ ﷺ أَنَّهُ قَالَ فِي الْأَنْصَارِ: "لاَ يُحِبُّهُمْ إِلاَّ مُؤْمِنٌ، وَلاَ يُبْغِضُهُمْ إِلاَّ مُنَافِقٌ؛ فَمَنْ أَحَبَّهُمْ أَحَبَّهُ اللَّهُ، وَمَنْ أَبْغَضَهُمْ أَبْغَضَهُ اللَّهُ".

(صحيح البخاري، رقم الحديث ٣٧٨٣، وصحيح مسلم، رقم الحديث ١٢٩ - (٧٥)، واللفظ لمسلم).

(55) நபி (ஸல்) அவர்கள் அன்ஸாரித் தோழர்களைப் பற்றி 'விசுவாசியைத் தவிர அவர்களை நேசிக்கமாட்டார்கள். நயவஞ்சகனைத் தவிர அவர்களை வெறுக்கமாட்டார்கள். யார் அவர்களை நேசிக்கிறாரோ அவர்களை அல்லாஹ்வும் நேசிப்பான். யார் அவர்களை வெறுக்கின்றாரோ அவர்களை அல்லாஹ்வும் வெறுக்கின்றான்' என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : பர்ரா ஃ பின் ஆஸிப் (ரலி).

ஆதாரம் : புஹாரி 3783, முஸ்லிம் 75. (இவ்வார்த்தை முஸ்லிமிலிருந்து).

### 🖊 ஹதீஸ் அறிவிப்பாளர்:

அபூ இமாரா∴ அல்பர்ரா∴ பின் ஆஸிப் பின் அல்ஹாரிஸ் அல் அன்ஸாரீ என்பவர் கண்ணியமிக்க நபித்தோழரும் மார்க்க சட்டக்கலைப் பேரறிஞருமாவார். அவருடைய தந்தையும் நபித்தோழர் என்பது குறிப்பிடத்தக்கது. புஹாரி முஸ்லிமில் இவருடைய 305 நபிமொழிகள் பதியப்பட்டுள்ளன.

நபி (ஸல்) அவர்களுடனும், அவர்களுக்குப் பின்னரும் பல யுத்தங்களில் இவர் கலந்து கொண்டிருந்தார்கள். கூபாவில் வந்திறங்கி அங்கேயே வசித்தார்கள். ஹி. 72ல் அங்கேயே மரணித்தார்கள். (இவரது மரணத்தேதியில்) வேறு கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன.

### ☞ ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) (மதீனா வாசிகளான) அன்ஸாரிகளுடைய மகத்தான சிறபுக்களை இந்நபிமொழி அதன் உள்ளடக்கத்தில் பொதிந்துள்ளது. ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நேசித்து, அல்லாஹ்வுடைய மார்க்கமாகிய இஸ்லாத்திற்கு உதவி செய்து, இறைபாதையில் அவர்களது உயிர்,

உடமைகளை செலவளித்தவர்கள். எனவே அவர்களை நேசிப்பதை விசுவாசத்தின் அடையாளமாகவும், வெறுப்பதை நிராகரிப்பு மற்றும் நயவஞ்சகத்தின் அடையாளமாகவும் (நபியவர்கள்) ஆக்கியுள்ளார்கள்.

(2) அனைத்து அன்ஸாரித் தோழர்களையும் நேசிப்பது அவசியமாகும். அவர்கள் (மதீனாவிலுள்ள) ஒளஸ் மற்றும் கஸ்ரஜ் ஆகிய (பிரபலமான) கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு உதவியவர்கள். அதனால்தான் அவர்களின் மகத்தான சிறப்பு, கண்ணியமிக்க செயலை உணர்த்துமுகமாக அவர்களை வெறுப்பது ஹராமாகும்.

٥٦- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: "لَوْ أَخْطَأْتُمْ؛ حَتَّى تَبْلُغَ خَطَايَاكُمْ السَّمَاءَ، ثُمَّ تُبْتُمْ لَتَابَ (اللهُ) عَلَيْكُمْ".

(سنن ابن ماجه، رقم الحديث ٤٢٤٨، وقال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه حسن صحيح).

(56) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : வானம் முட்டுமளவு நீங்கள் தவறுசெய்து விட்டு பின்பு அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்புக் கோரினால் அவன் உங்களுடைய பாவங்களை மன்னிப்பான்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : இப்னு மாஜா:. 4248. அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) அல்லாஹ்வுடைய அருளைவிட்டும் நிராசையடையாமல் இருப்பது முஸ்லிமுக்கு அவசியமாகும். எனவே அவன்மீது நல்லெண்ணம் வைத்து (தவறுகளுக்காக) உடனடியாகப் பாவமன்னிப்புத் தேட வேண்டும். ஏனெனில் ஒரு மனிதன் உண்மையாகத் தௌபாச் செய்யும் பட்சத்தில் அவனுடைய தௌபாவை அல்லாஹ் ஏற்றுக்கொள்கிறான்.

(2) பாவங்கள், தவறுகள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் அதற்காக அல்லாஹ்விடம் தௌபாச் செய்வதை இந்நபிமொழி தூண்டுகிறது. எனினும் பின்வரும் அதன் நிபந்தனைகள் பரிபூரணமாகும்வரை அல்லஹ்விடத்தில் அத்தௌபா ஏற்கப்படமாட்டாது :

(1) அந்த தௌபா அல்லாஹ்வுக்காக மாத்திரம் இருக்கவேண்டும். அதில் உலக நோக்கமோ மனிதர்களின் புகழோ எதிர்பார்க்கப்படக் கூடாது.

(2) செய்த பாவத்தை முழுமையாக விட்டுவிடுதல்.

(3) அப்பாவத்தைச் செய்ததற்காகக் கவலைப்படல்.

(4) மீண்டும் அதைச் செய்யமாட்டேன் என்று உறுதிகொள்ளல்.

(5) அப்பாவம் ஏனைய மனிதர்களின் உரிமைகளுடன் சம்பந்தப்பட்டிருந்தால் அவர்களிடம் அதனைத் திருப்பி ஒப்படைக்கவேண்டும்.

(6) சூரியன் மேற்கிலிருந்து உதிக்க முன் (மறுமை நெருங்க முன்), மரணத்தின் அறிகுறிகள் தென்பட முன் தௌபா செய்தல் வேண்டும்.

**٥٧- عَنْ أَبِيْ بَكْرٍ اَلصِّدِّيْقِ ﷺ أَنَّهُ قَالَ لِرَسُوْلِ اللّٰهِ ﷺ: عَلِّمْنِي الدُّعَاءَ أَدْعُوْ بِهِ فِيْ صَلَاتِيْ؛ قَالَ: "قُلْ: اَللّٰهُمَّ إِنِّيْ ظَلَمْتُ نَفْسِيْ ظُلْمًا كَثِيْرًا ، وَلَا يَغْفِرُ الذُّنُوْبَ إِلاَّ أَنْتَ؛ فَاغْفِرْ لِيْ مَغْفِرَةً مِنْ عِنْدِكَ، وَارْحَمْنِيْ؛ إِنَّكَ أَنْتَ الْغَفُوْرُ الرَّحِيْمُ".**

(صحيح البخاري، رقم الحديث ٨٣٤، وصحيح مسلم، رقم الحديث ٤٨ - (٢٧٠٥)، واللفظ للبخاري).

(57) என்னுடைய தொழுகையில் நான் கேட்பதற்கு ஒரு துஆவை எனக்குக் கற்றுத் தாருங்கள் என்று நபி(ஸல்) அவர்களிடம் நான் கேட்டபோது ‘அல்லாஹு ம்ம இன்னீ ளலம்து நப்ஸீ ளுல்மன் கஸீரா, வலா யஃபிருஸ் ஸு னூப இல்லா அன்த, பஃக்பிர்லீ மஃக்பிரதன் மின்

இன்திக, வர்ஹம்னீ இன்னக அன்தல் ஃகபூருர் ரஹீம்' என்று சொல்வீராக என்று கூறினார்கள்.

அறிவிப்பவர் : அபூ பக்ர் (ரலி).

ஆதாரம் : புஹாரி 834, முஸ்லிம் 2705. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

**பொருள் :**

இறைவா! எனக்கு நான் பெருமளவு அநீதி இழைத்து விட்டேன். உன்னைத் தவிர பாவங்களை எவரும் மன்னிக்க முடியாது. எனவே உன்னிடத்திலிருந்து மன்னிப்பு வழங்குவாயாக! மேலும் எனக்கு அருள் புரிவாயாக! நிச்சயமாக நீ மன்னிப்பவனும் அருள் புரிபவனுமாவாய்.

**✐ ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அபூ பக்ர் அஸ்ஸித்ததீக் அப்துல்லாஹ் பின் உஸ்மான் அத்தைமீ அல்குரஷீ (ரலி) அவர்கள் ஹிஜ்ரத்திற்கு 50 வருடங்களுக்கு முன் (கி.பி. 573) பிறந்தார்கள். அவர் முதலாம் கலீபாவாகவும் சுவனத்தைக் கொண்டு நற்செய்தி கூறப்பட்டவர்களில் ஒருவராகவும் இருப்பதுடன், நபியவர்களின் நெருங்கிய தோழராகவும் ஹிஜ்ரத்தின் போது பிரயாணத் தோழராகவும் இருந்தார்கள். பல சந்தர்ப்பங்களில் நபியவர்களை உண்மைப்படுத்தியதால் அஸ்ஸித்தீக் (உண்மையாளர்) என்ற சிறப்புப்பெயரை

நபியவர்களே இவருக்கு வைத்தார்கள். இவருடைய 142 நபிமொழிகள் ஹதீஸ்கிரந்தங்களில் உள்ளன.

அபூ பக்ர் (ரலி) அவர்கள் மக்காவில் பிறந்து, குரைஷிகளின் செல்வந்தர்களில் ஒருவராகவும், அதன் தலைவர்களில் ஒருவராகவும் திகழ்ந்தார்கள். ஆண்களில் முதலில் இஸ்லாத்தை ஏற்றவரும் இவரே. பின்பு மக்காவிலிருந்து மதீனாவிற்கு நபியவர்களுடன் சேர்ந்து ஹிஜ்ரத் செய்தார்கள். பத்ருப்போர் உட்பட அனைத்துப் போர்களிலும் நபியவர்களுடன் கலந்துெொண்டார்கள். இவர்கள் இஸ்லாத்திற்கு உதவிசெய்த சந்தர்ப்பங்கள் பல உள்ளன.

ஹி. 11 ரபீஉல் அவ்வல் மாதம் 12ம் நாள் திங்கட்கிழமை நபி (ஸல்) அவர்கள் மரணித்தார்கள். அதே தினம் அபூ பக்ர் (ரலி) அவர்கள் கலீபாவாக பதவிப்பிரமாணம் செய்யப்பட்டார்கள். கவர்ணர்கள், நீதிபதிகளை நியமித்தல், படைகளைத் தயார்செய்து அனுப்புதல் போன்ற இஸ்லாமிய அரசாங்கத்தின் முக்கிய காரியங்களை ஆரம்பித்து செய்தார்கள். முழு அரேபியத் தீபகற்பத்தையும் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் கொண்டுவரும் வரை (இவ்வாறு செயலாற்றினார்கள்). இஸ்லாமியப் படைகளை இராக் மற்றும் ஸிரியாப் பகுதிகளுக்கு அனுப்ப ஆரம்பித்தார்கள். அதன் மூலம் இராக்கின் பெரும்பகுதியையும், ஸிரியாவின் ஒரு பகுதியையும் வெற்றிகொண்டார்கள். பின்னர் ஹி. 13 ஜு மாதல் ஆகிரா மாதம் 22ம் நாள் திங்கட்கிழமை தனது 63வது வயதில் அபூ பக்ர் (ரலி) அவர்கள் மரணித்தார்கள். ஆஇஷா (ரலி) அவர்களின் அறையில் நபியவர்களுக்கு

அருகாமையில் அடக்கம் செய்யப்பட்டார்கள். அவருக்குப் பின்னர் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் கலீபாவாக நியமிக்கப்பட்டார்கள்.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) மேற்கண்ட பிரார்த்தனை அதன் உள்ளடக்கத்தில் முஸ்லிம் அவனது தவறுகள், பாவங்கள், பலவீனத்தை அல்லாஹ்விற்கு முன்னால் ஏற்றுக்கொள்வதைப் பொதிந்துள்ளது. ஏனெனில் அவன் மாத்திரம்தான் அந்த மனிதனை மன்னிக்க சக்திபெற்றவன்.

(2) அல்லாஹ்வுடைய அழகிய திருநாமங்களைப் பயன்படுத்தி அவனிடத்தில் உதவி தேடும் முறையை இந்நபிமொழி முஸ்லிமுக்குக் கற்றுத்தருகின்றது. ஏனெனில் இப்பிரார்த்தனையின் இறுதியில் ‘இன்னக அன்தல் ஃகபூருர் ரஹீம்’ (நிச்சயமாக நீ மன்னிப்பவனும் அருள் புரிபவனுமாவாய்) என்று இடம்பெற்றுள்ளது.

٥٨- عَنْ عِمْرَانَ بْنِ حُصَيْنٍ اَلْخُزَاعِيِّ ﷺ أَنَّ رَسُوْلَ اللّٰهِ ﷺ رَأَى رَجُلاً مُعْتَزِلاً، لَمْ يُصَلِّ فِي الْقَوْمِ ؛ فَقَالَ: يَا فُلاَنُ، مَا مَنَعَكَ أَنْ تُصَلِّيَ فِي الْقَوْمِ؟ فَقَالَ: يَا رَسُوْلَ اللّٰهِ، أَصَابَتْنِيْ جَنَابَةٌ وَلاَ مَاءَ، قَالَ: "عَلَيْكَ بِالصَّعِيْدِ؛ فَإِنَّهُ يَكْفِيْكَ".

(صحيح البخاري، رقم الحديث ٣٤٨، وصحيح مسلم، رقم الحديث٣١٢ - (٦٨٢)، واللفظ للبخاري).

(58) ஒருவர் ஜமாஅத்துடன் தொழாமல் தனியாக இருப்பத்தைக் கண்ட நபி(ஸல்) அவர்கள், 'நீர் ஏன் ஜமாஅத்துடன் தொழவில்லை?' என்று கேட்டார்கள். அதற்கு அவர், இறைத்தூதர் அவர்களே! எனக்குக் குளிப்புக் கடமையாகிவிட்டது. தண்ணீர் கிடைக்கவில்லை என்று கூறியபோது 'மண்ணில் தயம்மும் செய்யும்! அது உமக்குப் போதுமானது' என்று நபியவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பவர் : இம்ரான் பின் ஹுஸைன் (ரலி).

ஆதாரம் : புஹாரி 348, முஸ்லிம் 682. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

## ஹதீஸ் அறிவிப்பாளர்:

அபூ நுஜைத் இம்ரான் பின் ஹுஸைன் அல் குஸாஈ என்பவர் கண்ணியமிக்க நபித்தோழராகவும், இஸ்லாத்தின் முக்கியமான பிரபலங்களில் ஒருவராகவும் உள்ளார். முஸ்லிம்களின் அரசியல் விவகாரங்களில் சிறந்த அனுபவமுள்ளவராகவும் இருந்தார். உமர் (ரலி) அவர்கள் இவரை பஸராவிற்கு நீதிபதியாகவும், அம்மக்களுக்கு மார்க்க சட்டங்களை விளக்கவும் நியமித்தார்கள்.

இவர் பிரார்த்தனை வெகுவில் ஏற்கப்படக்கூடியவராக இருந்ததுடன், (உஸ்மான் (ரலி) மற்றும் அலீ (ரலி) ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற) குழப்ப சூழ்நிலைகளில் கலந்து போரிடாமல் ஒதுங்கிக் கொண்டார்கள். இவர் பஸராவிலேயே குடியிருந்து ஹி. 52ல் மரணித்தார்கள். (மரணத்தேதியில்) வேறு கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) மக்களுக்கு இலகுபடுத்துவது இஸ்லாத்தின் சிறப்பியல்புகளில் உள்ளது. ஏனெனில் தண்ணீர் கிடைப்பது கடினமாகும் போது அல்லது அதனைப் பயன்படுத்துவதால் விபரீதம் ஏற்படுமிடுத்து (கடமையான) குளிப்பு மற்றும் வுழூவிற்குப் பதிலாக இஸ்லாம் தயம்முமை அறிமுகப்படுத்தியுள்ளது.

(2) ஒரு முஸ்லிமுக்கு நீர் கிடைக்காவிட்டால் அல்லது நோய், தாகம் போன்ற காரணங்களுக்காக இருக்கும் நீரைப் பயன்படுத்த முடியாவிட்டால், இச்சந்தர்ப்பத்தில் வுழூ மற்றும் (கடமையான) குளிப்பின் இடத்தில் இந்தத் தயம்மும் இருக்கும். அவர் குளிப்புக் கடமையானவராக இருந்தாலும் தயம்மும் செய்து தொழுவார். பின்பு நீர் கிடைத்தால் அல்லது பயன்படுத்த முடியாமலிருந்த காரணம் நீங்கிவிட்டால் குளித்துக் கொள்வது கடமை.

(3) கடமையான குளிப்பிற்காக ஒருவர் தயம்மும் செய்தால் மற்றொரு முறை குளிப்பு கடமையாகும்

வரை அல்லது நீர் கிடைக்கும் வரை ஜனாபத்திலிருந்து அவன் சுத்தமானவனாகவே இருக்கின்றான். அதன்படி ஒவ்வொரு தொழுகைக்காகவும் தயம்மும் செய்யத் தேவையில்லை. குளிப்பிற்காகச் செய்த தயம்முமிற்குப் பின் வுழூ முறிந்தால் மாத்திரமே மீண்டும் தயம்மும் செய்ய வேண்டும். மீண்டும் அவனுக்கு குளிப்பு கடமையானாலே தவிர (அப்போது குளிப்பிற்காக மீண்டும் தயம்மும் செய்து கொள்வான்).

(4) (நபிமொழியில் கூறப்பட்டுள்ள) மண் என்பது புழுதி மணல் உள்ள பூமியைக் குறிக்கும்.

**தயம்மும் செய்யும் முறையானது :**

- தயம்மும் செய்வதை மனதால் எண்ணியவராக பிஸ்மில்லாஹ் சொல்ல வேண்டும்.
- பின்பு தனது இரு உள்ளங்கைகளையும் ஒரு முறை பூமியில் அடித்துவிடடு, அவ்விரு கைகளையும் ஊதிவிடவேண்டும்.
- பின்பு வலது கையின் வெளிப்புறத்தை மணிக்கட்டு வரை இடது உள்ளங்கையாலும், இடது கையின் வெளிப்புறத்தை மணிக்கட்டு வரை வலது உள்ளங்கையாலும் தடவி விட்டு, இரு

உள்ளங்கைகளாலும் தனது முகத்தை ஒரு முறை தடவிக்கொள்ளவேண்டும்[1].

ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு செய்ததாக சில அறிவிப்புக்கள் வந்துள்ளன. (பார்க்க : புஹாரி 347, முஸ்லிம் 368, அபூ தாவூத் 321, நஸாஈ 320).

(5) தயம்மும் செய்யும் முறையில் வேறு விதங்களும் வந்துள்ளன. விரிவஞ்சி கூறவில்லை.

٥٩- عَنْ أَبِيْ ذَرٍّ ﷺ قَالَ: كَانَ النَّبِيُّ ﷺ إِذَا أَخَذَ مَضْجَعَهُ مِنَ اللَّيْلِ؛ قَالَ: " اَللَّهمَّ بِاسْمِكَ أَمُوْتُ وَأَحْيَا؛ فَإِذَا اسْتَيْقَظَ؛ قَالَ: "اَلْحَمْدُ لِلَّهِ الَّذِيْ أَحْيَانَا بَعْدَ مَا أَمَاتَنَا، وَإِلَيْهِ النُّشُوْرُ".

(صحيح البخاري، رقم الحديث ٦٣٢٥).

---

(1) தயம்முமில் கையை முதலில் தடவுவதற்கு மேற்கண்ட நபி ஆதாரமாக இருந்தாலும் பின்வரும் காரணங்களால் முதலில் முகத்தைத் தடவிவிட்டு பின் கைகளைத் தடவ வேண்டும்.

(1) தயம்மும் பற்றி வந்துள்ள அல்குர்ஆன் வசனங்களில் முதலில் முகமே கூறப்பட்டுள்ளது. (அந்நிஸா : 43, அல்மாஇதா: : 6).

(2) முகத்தை முதலில் தடவவேண்டும் என வேறு பல அறிவிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. உதாரணத்திற்காக : புஹாரி 337, 338, 339 மற்றும் முஸ்லிமிலும் ஏனைய பல கிரந்தங்களிலும் பல நபித்தோழர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன.

(3) சுத்தம் செய்வதில் அடிப்படை வுழூவாகும். தயம்மும் அதற்குப் பதிலாகும். வுழூவில் எவ்வாறு ஒழுங்கு முறைப்படி செய்வது கட்டாயமோ அதற்குப் பதிலான தயம்முமிலும் ஒழுங்குமுறை அவசியம்.

(4) முகத்தை முற்படுத்த வேண்டும் என்று வரக்கூடிய அறிவிப்புக்கள் கைகளை முற்படுத்த வேண்டும் என்று வரக்கூடிய அறிவிப்புக்களை விட பலமானதென அறிஞர்கள் கூறியுள்ளனர். (பார்க்க : அஷ்ஷரஹுல் மும்தி: - ஆசிரியர் : அஷ்ஷேஹ் முஹம்மத் அல்உஸைமீன்)

அல்லாஹ் மிக்க அறிந்தவன். (மொழிபெயர்ப்பாளர்)

(59) நபி(ஸல்) அவர்கள் படுக்கைக்குச் செல்லும்போது 'அல்லாஹு ம்ம பிஸ்மிக அமூத்து வ அஹ்யா' (இறைவா! உன் பெயர் கூறியே இறக்கிறேன். உயிர் வாழவும் செய்கிறேன்) என்று கூறுவார்கள். உறக்கத் திலிருந்து விழிக்கும்போது, 'அல்ஹம்து லில்லாஹில் லதீ அஹ்யானா பஃத மா அமாதனா வஇலைஹிந் நுஷூ ர் (எங்களை இறக்கச் செய்து பின்னர் எங்களுக்கு உயிரூட்டிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்). மேலும், (மண்ணறையிலிருந்து வெளியேறி) அவனிடமே செல்ல வேண்டியுள்ளது.) என்று கூறுவார்கள்.

அறிவிப்பவர் : அபூ தர் (ரலி).

ஆதாரம் : புஹாரி 6325.

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அபூதர் என்ற (புனைப்பெயருள்ள) இவரின் பெயர் ஜு ன்துப் இப்னு ஜு னாதா அல்கிபாரீ என்பதாகும். இவர் (தனக்கென) எந்தப் பணத்தையும் பாதுகாக்காமல் (அனைத்தையும் தருமம் செய்யும்) கொடைவள்ளலாக இருந்தார். மதீனாவில் மார்க்கத் தீர்ப்புச் சொல்லிக்கொண்டிருந்த இவர் நபிகளாரைத் தொட்டும் அறிவித்த 281 பொன்மொழிகள் நபிமொழிக் கிரந்தங்களில் பதியப்பட்டுள்ளன. (மதீனாவில் இருந்து) ஸிரியாவுக்குச்

சென்று, பின் அங்கிருந்து ‘ரப்தா’ என்ற இடத்திற்குச் சென்று வசித்தார்கள். (இந்த ஊர் மதீனாவில் இருந்து 100 கி. மீ தொலைவில் ரியாத் திசையில் அமைந்துள்ளது.) ஹி. 31 அல்லது 32ல் அங்கேயே மரித்தார்கள். அவருடைய ஜனாஸாத் தொழுகையை அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் நடத்தினார்கள்.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) தூங்கும் போதும் தூங்கி எழும்பியவுடனும் மேற்கண்ட பிரார்த்தனைகளை ஓதுவது ஸு ன்னா என்பதை இந்நபிமொழி உறுதிசெய்கின்றது.

(2) தூங்கும் போதும் தூங்கி எழும்பியவுடனும் அல்லாஹ்வை நினைவுகூர்வது மனிதனின் வெற்றிக்கும் பாதுகாப்பிற்குமான காரணங்களிலுள்ளது.

٦٠- عَنْ عَائِشَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا، أَنَّ النَّبِيَّ ﷺ كَانَ إِذَا أَوَى إِلَى فِرَاشِهِ كُلَّ لَيْلَةٍ؛ جَمَعَ كَفَّيْهِ، ثُمَّ نَفَثَ فِيْهِمَا؛ فَقَرَأَ فِيْهِمَا: ﴿قُلْ هُوَ ٱللَّهُ أَحَدٌ﴾، وَ﴿قُلْ أَعُوذُ بِرَبِّ ٱلْفَلَقِ﴾، وَ﴿قُلْ أَعُوذُ بِرَبِّ ٱلنَّاسِ﴾، ثُمَّ يَمْسَحُ بِهِمَا مَا اسْتَطَاعَ مِنْ جَسَدِهِ، يَبْدَأُ بِهِمَا عَلَى رَأْسِهِ وَوَجْهِهِ، وَمَا أَقْبَلَ مِنْ جَسَدِهِ، يَفْعَلُ ذَلِكَ ثَلَاثَ مَرَّاتٍ.

(صحيح البخاري، رقم الحديث ٥٠١٧).

(60) நபி(ஸல்) அவர்கள் தங்களின் படுக்கைக்கு (உறங்கச்) சென்றால் ஒவ்வோர் இரவிலும் தம் உள்ளங்கைகளை இணைத்து, அதில் 'குல் ஹுவ வல்லாஹு அஹத்', 'குல் அஊது பிரப்பில் ஃபலக்', 'குல் அஊது பிரப்பின்னாஸ்' ஆகிய (112, 113, 114) அத்தியாயங்களை ஓதி ஊதிக்கொள்வார்கள். பிறகு தம் இரண்டு கைகளால் (அவை எட்டும் அளவிற்கு) தம் உடலில் இயன்ற வரையில் தடவிக் கொள்வார்கள். முதலில் தலையில் ஆரம்பித்து, பிறகு முகம், பிறகு தம் உடலின் முற்பகுதியில் கைகளால் தடவிக் கொள்வார்கள். இவ்வாறு மூன்று முறை செய்வார்கள்.

அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி).

ஆதாரம் : புஹாரி 5017.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 45ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) தூங்கும் போது ஓதும் பிரார்த்தனைகளைப் பேணிவருது முஸ்லிமுக்குக் கடமையாகும். அதிலுள்ளதுதான் மேற்கண்ட மூன்று அத்தியாயங்களையும் ஓதி உள்ளங்கையில் ஊதி மேனியில் முடியுமானளவு தடவிக்கொள்வது.

(2) நோய்வாய்ப்படும் போதும் இம்மூன்று அத்தியாயங்களையும் ஓதி உள்ளங்கையில் ஊதி தலை, முகம் மற்றும் மேனியில் முடியுமானளவு தடவிக்கொள்வது முஸ்லிமுக்கு விரும்பத்தக்கதாகும்.

٦١- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: " قَالَ اللّٰهُ: أَعْدَدْتُ لِعِبَادِيَ الصَّالِحِيْنَ: مَا لاَ عَيْنٌ رَأَتْ، وَلاَ أُذُنٌ سَمِعَتْ، وَلاَ خَطَرَ عَلَى قَلْبِ بَشَرٍ".

(صحيح البخاري، رقم الحديث ٧٤٩٨، وصحيح مسلم، رقم الحديث ٣ - (٢٨٢٤)، واللفظ للبخاري).

(61) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : 'என் நல்லடியார்களுக்காக எந்தக் கண்ணும் பார்த்திராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த மனிதரின் உள்ளத்திலும் தோன்றியிராத இன்பங்களை சொர்க்கத்தில் நான் தயார்ப்படுத்தி வைத்துள்ளேன்' என்று அல்லாஹ் கூறினான்.

அறிவிப்பவர் : அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 7498, முஸ்லிம் 2824. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) மறுமையில் சுவனத்தின் இன்பங்களை கற்பனைசெய்து பார்க்க முடியாது. உலக விடயங்கள், இன்பங்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கவும் முடியாது. ஏனெனில் உலக விடயங்கள், இன்பங்கள் மறுமையிலுள்ள சுவன இன்பத்தை விட்டும் முழுமையாக மாறுபடுகிறது.

(2) அல்லாஹ்வை இறைவனாகவும், இஸ்லாத்தை மார்க்கமாகவும், முஹம்மத் (ஸல்) அவர்களை இறைத்தூதராகவும் ஏற்று, அதை இணைவைப்பு, நிராகரிப்பு, நூதனங்கள், பாவங்கள் போன்றவற்றுடன் கலக்காமல் இருப்பவர்களுக்கே மறுமையில் சுவன இன்பங்கள் சொந்தமாகும்.

**٦٢- عَنْ عَبْدِ اللهِ بْنِ عُمَرَ رَضِيَ اللَّهُ عَنْهُمَا أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ: "إِذَا أَكَلَ أَحَدُكُمْ؛ فَلْيَأْكُلْ بِيَمِيْنِهِ، وَإِذَا شَرِبَ؛ فَلْيَشْرَبْ بِيَمِيْنِهِ ؛ فَإِنَّ الشَّيْطَانَ يَأْكُلُ بِشِمَالِهِ، وَيَشْرَبُ بِشِمَالِهِ".**

(صحيح مسلم، رقم الحديث ١٠٥- (٢٠٢٠).

(62) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்களில் ஒருவர் உணவு உட்கொள்வதாயின் தனது வலக்கரத்தால் உட்கொள்ளவும். மேலும் அவர்

பருகுவதாயின் வலக்கரத்தால் பருகட்டும். ஏனெனில் ஷைத்தான் உண்ணுவதும் பருகுவதும் இடக்கரத்தாலேயே.

அறிவிப்பவர் : அப்துல்லாஹ் பின் உமர் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 2020.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 38ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) இஸ்லாத்தில் உண்ணல் பருகலின் சில ஒழுக்கங்களை இந்நபிமொழி தெளிவு படுத்துகின்றது.

(2) இடதுகையால் உண்ணாமல் பருகாமல் வலது கையால் உண்ணுவதும் பருகுவதும் முஸ்லிமுக்கு அவசியமாகும்.

(3) உலக, மார்க்க விடயங்களில் ஷைத்தானைப் பின்பற்றுவதைவிட்டும் தூரமாகியிருப்பது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

٦٣- عَـنْ عَائِشَـةَ رَضِـيَ اللّـهُ عَنْهَـا ، أَنَّ رَسُـوْلَ اللّٰهِ ﷺ قَـالَ: "إِذَا أَكَـلَ أَحَدُكُمْ؛ فَلْيَذْكُرِ اسْمَ اللّٰهِ؛ فَإِنْ نَسِيَ أَنْ يَذْكُرَ اسمَ اللّٰهِ فِيْ أَوَّلِهِ؛ فَلْيَقُلْ : بِسْمِ اللّٰهِ أَوَّلِهِ وَآخِرِهِ".

(سنن أبي داود، رقم الحديث ٣٧٦٧، وجامع الترمذي، رقم الحديث ١٨٥٨، واللفظ لأبي داود، قَالَ الإمام الترمذي عن هذا الحديث: بأنه حسن صحيح، وقَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(63) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்களில் ஒருவர் உணவு உட்கொள்வதாயின் அவர் 'பிஸ்மில்லாஹ்' என்று அல்லாஹ்வின் பெயர் கூறிக்கொள்ளட்டும். (அவ்வாறு) ஆரம்பத்தில் அல்லாஹ்வின் பெயர் கூற மறந்தால் 'பிஸ்மில்லாஹி அவ்வலிஹீ வஆகிரிஹீ' என்று கூறிக்கொள்ளட்டும். (ஆரம்பத்திலும் இறுதியிலும் அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு சாப்பிடுகிறேன்).

அறிவிப்பவர் : ஆஇஷா (ரலி).

ஆதாரம் : அபூ தாவூத் 3767, திர்மிதீ 1858, (இவ்வார்த்தை அபூ தாவூதிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 45ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) உண்ணும்போதும் பருகும்போதும் அல்லாஹ்வின் பெயரைச் சொல்வது இஸ்லாத்தில் உண்ணல் பருகலின் ஒழுக்கங்களிலுள்ளதாகும். ஆரம்பத்தில் அல்லாஹ்வின் பெயர் சொல்ல மறந்தால் 'பிஸ்மில்லாஹி அவ்வலிஹீ வஆகிரிஹீ' என்று சொல்ல வேண்டும்.

(2) இஸ்லாமிய வாழ்கையின் அனைத்து அம்சங்களிலும் நபி (ஸல்) அவர்களை முன்மாதிரியாக எடுப்பது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

٦٤- عَنْ جَرِيرٍ ﵁ عَنِ النَّبِيِّ ﷺ قَالَ: "مَنْ يُحْرَمِ الرِّفْقَ يُحْرَمِ الْخَيْرَ".

(صحيح مسلم، رقم الحديث ٧٤- (٢٥٩٢).

(64) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நளினத்தை இழந்தவர் நன்மையை இழந்தவராவார்.

அறிவிப்பவர் : ஜரீர் (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 2592.

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

ஜரீர் பின் அப்தில்லாஹ் பின் ஜாபிர் அல்பஜலீ என்ற நபித்தோழர் ஜாஹிலிய்யத்திலும் இஸ்லாத்திலும் தனது கோத்திரத்தின் தலைவராக இருந்தார்கள். ஹி. 10க்கு முன் இவர் இஸ்லாத்தை ஏற்றார். (இதில்) வேறு கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன. புத்திக்கூர்மை உள்ளவராகவும் மார்க்க அறிவுள்ளவராகவும் திகழ்ந்த

இவர் தோற்றத்திலும் அழகானவராக இருந்தார்கள். இராக் மற்றும் அதனைச் சூழவுள்ள ஊர்களின் வெற்றியில் இவருக்கும் பெரிய பங்குள்ளது. நபியவர்களைத் தொட்டும் இவருடைய 100 நபிமொழிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. ஹி. 51ல் ஸிரியா மற்றும் ஹைராவிற்கிடையில் உள்ள கிர்கீஸியா எனும் இடத்தில் மரணித்தார்கள். (மரணத் தேதியில்) வேறு கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) அழைப்புப்பணி, ஒழுக்கம், கற்பித்தல், மற்றும் மனைவி மக்களுடன் பழகுதல் அனைத்து விடயங்களிலும் கடின, கொடுமைப் போக்கைக் கடைபிடிக்காமல் நளினமான மிருதுவான போக்கைக் கடைபிடிக்க வேண்டும் என்பதை இந்நபிமொழி தூண்டுகின்றது.

(2) நளினமான மிருதுவான போக்கின் முடிவு பயனள்ளது. கடின, கொடுமைப் போக்கின் முடிவு பொதுவாகவே பயனற்ற (மக்களை மார்க்கத்தை விட்டும்) தூரமாக்கக்கூடியது.

٦٥- عَنْ عَلِي بْنِ أَبيْ طَالِبٍ ﷺ، أنَّ النبيَّ ﷺ كان يَقُوْلُ فِي آخِرِ وِتْرِهِ: " اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِرِضَاكَ مِنْ سَخَطِكَ، وَبِمُعَافَاتِكَ مِنْ عُقُوْبَتِكَ، وَأَعُوْذُ بِكَ مِنْكَ، لاَ أُحْصِيْ ثَنَاءً عَلَيْكَ، أَنْتَ كَمَا أَثْنَيْتَ عَلَى نَفْسِكَ".

(سنن أبي داود، رقم الحديث ١٤٢٧، جامع الترمذي، رقم الحديث٣٥٦٦، واللفظ لأبي داود، قَالَ الإمام الترمذي عن هذا الحديث: بأنه حسن غريب، و قَالَ العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث: بأنه صحيح).

(65) நபி (ஸல்) அவர்கள் வித்ருத் தொழுகையின் கடைசியில் 'அல்லாஹு ம்ம இன்னீ அஊது பிரிழாக மின் ஸகதிக, வபிமுஆபாதிக மின் உகூபதிக. வஅஊது பிக மின்க, லா உஹ்ஸீ ஸனாஅன் அலைக அன்த கமா அஸ்னைத அலா நப்ஸிக' என்று கூறுவார்கள்.

அறிவிப்பவர்: அலீ பின் அபீ தாலிப் (ரலி).

ஆதாரம்: அபூ தாவூத் 1427, திர்மிதீ 3566, (இவ்வார்த்தை அபூ தாவூதிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் ஃகரீப் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஸஹீஹ் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**பொருள் :**

இறைவா! உன் திருப்தியின் மூலம் உன் கோபத்திலிருந்தும், உன் மன்னிப்பின் மூலம் உனது தண்டனையிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன். மேலும் உன் (கருணையி)னைக் கொண்டு உன் (தண்டனையி)னை விட்டும் பாதுகாப்புத் தேடுகிறேன். உன்னை நீ புகழ்ந்து கொண்டதைப் போன்றே என்னால் உன்னைப் புகழ இயலவில்லை.

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 35ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது. )

☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) மேற்கண்ட மகத்தான பிரார்த்தனையை மனனமிடுவது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

(2) வித்ருத் தொழுகையின் இறுதியில் ஸலாம் கொடுத்தவுடன், (தொழுகையில்) ஸுஜூதில், தூங்க ஆரம்பிக்கும் போது அல்லது ஏனைய சந்தர்ப்பங்களிலும் இப்பிரார்த்தனையை ஓதுவது முஸ்லிமுக்கு விரும்பத்தக்கது.

(3) ஒரு முஸ்லிம் பிரார்த்திக்கும்போது அவனின் உள்ளம் விழிப்புணர்வுடன் சமூகமாக இருக்க வேண்டும்.

٦٦- عَنْ أُمِّ سَلَمَةَ رَضِيَ اللَّهُ عَنْهَا ، قَالَتْ: قَالَ رَسُوْلُ اللّٰهِ ﷺ: "مَنْ شَرِبَ فِيْ إِنَاءٍ مِنْ ذَهَبٍ أَوْ فِضَّةٍ؛ فَإِنَّمَا يُجَرْجِرُ فِيْ بَطْنِهِ نَارًا مِنْ جَهَنَّمَ".

(صحيح مسلم، رقم الحديث ١- (٢٠٦٥).

(66) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : தங்கம் அல்லது வெள்ளிப் பாத்திரத்தில் (பாணங்களை) அருந்தியவர் தனது வயிற்றில் மிடறு மிடறாக நரக நெருப்பையே விழுங்கிக் கொண்டிருக்கிறார்.

அறிவிப்பவர் : உம்மு ஸலமா (ரலி).

ஆதாரம் : முஸ்லிம் 2065.

## ✍ஹதீஸ் அறிவிப்பாளர்:

விசுவாசிகளின் தாயார் உம்மு ஸலமா ஹின்து பின்து அபீ உமைய்யா அல் மஃக்ஸூமிய்யா (ரலி) அவர்கள் காலித் பின் வலீத் (ரலி) அவர்களின் சிறிய தந்தையின் மகளாவார். நபித்துவத்திற்கு 17 வருடங்களுக்கு முன் மக்காவில் பிறந்தார்கள். ஹபஷாவிற்கு (முதலில்) ஹிஜ்ரத் செய்து பின் மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தார்கள். அறிவிலும் குணத்திலும் சிறந்தவார்களாக இருந்தது போன்று, அழகிய பெண்களில் ஒருவராகவும் சிறந்த குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் இருந்தார்கள்.

நபியவர்களை மணக்க முன் (நபியவர்களின்) பால்குடிச் சகோதரரான அபூ ஸலமா அப்துல்லாஹ் பின் அப்தில் அஸத் அல் மஃக்ஸூமீ அவர்களை மணம்புரிந்தார்கள். அவர் பத்ருப் போரில் கலந்து கொண்டு பின் உஹதுப் போரில் வைத்து காயமடைந்தார்கள். அக்காயத்தின் தாக்கத்தால் ஹி. 3ல் ஜுமாதல் ஆகிரா மாதம் மதீனாவில் மரணித்தார்கள்.

பின்பு நபி (ஸல்) அவர்கள் இவரின் இத்தாக்காலம் முடிந்த பின் ஹி. 4ல் ஷவ்வால் மாதம் திருமணஞ்செய்து கொண்டார்கள். இவர் மார்க்க சட்டக்கலை அறிஞராகவும் புத்திக்கூர்மை உள்ளவராகவும் இருந்தார்கள். ஹுதைபியாவின் போது இவர்கள் நபியவர்களுக்கு வழங்கிய ஆலோசனை அறியப்பட்ட

விடயம். நபியவர்களுடன் பல யுத்தங்களில் சென்றிருக்கிறார்கள்.

நபியுடைய மனைவியரில் இறுதியாக மரணித்தவர் இவர்கள்தான். சுமார் 90 வருடங்கள் வாழ்ந்த பின் ஹி. 59ல் மரணித்தார்கள். ஹி. 61 என்ற கருத்தும் கூறப்பட்டுள்ளது. பகீஇல் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

### ☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:

(1) உண்ணல், பருகல், சுத்தம் செய்தல் போன்ற எந்தவொன்றிற்கும் தங்கம் மற்றும் வெள்ளிப் பாத்திரங்களைப் பயன்படுத்துவது அனைத்து முஸ்லிம் ஆண், பெண்களுக்கும் ஹராமாகும்.

(2) உண்ணல், பருகல் மற்றும் வாழ்கையின் அனைத்துப் போக்குகளிலும் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது முஸ்லிமுக்குக் கடமையாகும். அதை அறிந்ததன் பின் யார் நபிவழிக்கு முரணாக செயற்படுகிறாரோ அவர் எச்சரிக்கைக்கும் தண்டனைக்கும் உட்படுகின்றார்.

(3) வீண்விரயம் மற்றும் பெருமை போன்ற அனைத்துப் போக்குகளை விட்டும் தூரமாகியிருப்பது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

٦٧- عَنْ جَابِرِ بْنِ عَبْدِ اللَّهِ رَضِيَ اللَّهُ عَنْهُمَا ، أَنَّ رَسُوْلَ اللهِ ﷺ قَالَ: "مَنْ قَالَ حِيْنَ يَسْمَعُ النِّدَاءَ: اَللَّهُمَّ رَبَّ هَذِهِ الدَّعْوَةِ التَّامَّةِ، وَالصَّلَاةِ الْقَائِمَةِ، آتِ

مُحَمَّدًا اَلوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ، وَابْعَثْهُ مَقَامًا مَحْمُوْدًا اَلذِّيْ وَعَدْتَهُ، حَلَّتْ لَهُ شَفَاعَتِيْ يَوْمَ الْقِيَامِةِ".

(صحيح البخاري، رقم الحديث ٦١٤).

(67) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : பாங்கை செவியுற்ற பின் யார் ‘அல்லாஹு ம்ம ரப்ப ஹாதிஹித் த∴வதித்தாம்மா∴, வஸ்ஸலாதில் காஇமா∴, ஆதி முஹம்மதனில் வஸீலத வல்பழீலா∴, வப்அஸ்ஹு மகாமன் மஹ்மூதனில்லதீ வஅத்தஹ்’ என்று கூறுவாரோ மறுமையில் அவருக்கு என்னுடைய பரிந்துரை (உறுதியாக) ஆகுமாகின்றது.
அறிவிப்பவர் : ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி).
ஆதாரம் : புஹாரி 614.

**பொருள் :**
முழுமையான இந்த அழைப்பிற்குச் சொந்தக்காரனே! நிலையான தொழுகைக்கும் உரியவனே! முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வஸீலா எனும் பதவியையும் சிறப்பையும் வழங்குவாயாக! நீ அவர்களுக்கு வாக்களித்த புகழுக்குரிய இடத்தில் எழுப்புவாயாக!
(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 25ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) அதான் சொல்லி முடிந்ததும் மேற்கண்ட பிரார்த்தனையை ஓதும்படி இந்நபிமொழி தூண்டுகிறது.

(2) இந்தப் பிரார்த்தனையை மனனமிட்டு அதானுக்குப் பின் ஓதுவதில் பொடுபோக்குச் செய்யாமலிருப்பது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

(3) இப்பிரார்த்தனையை அதானுக்குப் பின் ஓதுவதன் சிறப்பை இந்நபிமொழி எடுத்துக்காட்டுகிறது. இதை ஓதுபவருக்கு மறுமையில் நபி (ஸல்) அவர்களின் சிபார்ஷு கிடைக்கின்றது.

**٦٨- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ، أَنَّ النَّبِيَّ ﷺ قَالَ: "مَا مِنْ يَوْمٍ يُصْبِحُ العِبَادُ فِيْهِ، إِلاَّ مَلَكَانِ يَنْزِلاَنِ؛ فَيَقُوْلُ أَحَدُهُمَا: اَللَّهُمَّ! أَعْطِ مُنْفِقًا خَلَفًا، وَيَقُوْلُ الْآخَرُ: اَللَّهُمَّ! أَعْطِ مُمْسِكًا تَلَفًا".**

(صحيح البخاري، رقم الحديث ١٤٤٢، وصحيح مسلم، رقم الحديث ٥٧- (١٠١٠)، واللفظ للبخاري).

(68) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :அடியார்கள் காலைப்பொழுதை அடையும் ஒவ்வொரு நாளும் இரண்டு வானவர்கள் இறங்குகின்றனர். அவ்விருவரில் ஒருவர், ‘அல்லாஹ்வே! தர்மம் செய்பவருக்குக் பிரதிபலனை அளித்திடுவாயாக!’ என்று கூறுவார். இன்னொருவர்

'அல்லாஹ்வே! (தர்மம் செய்யாமல் பொருளைத்) தடுத்து வைத்துக் கொள்பவர்களுக்கு அழிவை ஏற்படுத்துவாயாக!' என்று கூறுவார்.

அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (ரலி).

ஆதாரம்: புஹாரி 1442, முஸ்லிம் 1010. (இவ்வார்த்தை புஹாரியிலிருந்து).

(இந்நபிமொழியின் அறிவிப்பாளர் பற்றி 2ம் நபிமொழியில் கூறப்பட்டுள்ளது.)

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) இறைபாதையில் செலவிடுவது அதிக நன்மை அபிவிருத்தியைக் கொண்டுவரும் காரணங்களிலுள்ளது. ஏனெனில் இறைபாதையில் செலவிடுவதால் பகரம் கிடைக்கின்றது. பகரம் என்பது தன்னில், தன் மனைவி மக்களிடத்தில் சீர்திருத்தம் உருவாகுதல், உடம்பில் ஆரோக்கியம், உள்ளத்தில் மகிழ்ச்சி, ஈருலக வெற்றிக்கான அனுகூலம் போன்ற அனைத்தையும் உள்ளடக்குகின்றது.

(2) அல்லாஹ் ஒரு முஸ்லிமுக்கு ஹலாலான சொத்துக்களை வழங்கியிருந்தால் அதில் கஞ்சத்தனம் காட்டக்கூடாது. ஏனெனில் கஞ்சத்தனம் அழிவை வரவழைக்கும். அழிவு என்பது மன அமைதியின்மை, கவலை, நன்மை ஆரோக்கியம் அபிவிருத்து ஈருலக

வெற்றி ஆகியவிற்றுக்கான அனுகூலம் குறைதல் ஆகிய அனைத்தையும் உள்ளடக்குகின்றது.

**٦٩- عَنْ أَبِيْ بَكْرَةَ ﷺ، أَنَّ النَّبِيَّ ﷺ كَانَ إِذَا أَتَاهُ أَمْرٌ يَسُرُّهُ، أَوْ بُشِّرَ بِهِ؛ خَرَّ سَاجِدًا؛ شُكْرًا لِلَّهِ تَبَارَكَ وَتَعَالَى.**

(سنن ابن ماجه، رقم الحديث ١٣٩٤، وجامع الترمذي، رقم الحديث ١٥٧٨، واللفظ لابن ماجه، وقال الإمام الترمذي عن هذا الحديث بأنه: حسن غريب، وقال العلامة محمد ناصر الدين الألباني عن هذا الحديث بأنه: بأنه حسن).

(69) நபி (ஸல்) அவர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி ஏதாவது கிடைத்தால் அல்லது நற்செய்தி கூறப்பட்டால் உயர்த்தியான அந்த அல்லாஹ்விற்கு நன்றி செலுத்துமுகமாக ஸுஜூது செய்வார்கள்.

அறிவிப்பவர் : அபூ பக்ரா (ரலி).

ஆதாரம் : திர்மிதீ 1578, இப்னு மாஜாஃ 1394. (இவ்வார்த்தை இப்னு மாஜாஃவிலிருந்து). இமாம் திர்மிதீ அவர்கள் இந்நபிமொழி ஹஸன் ஃகரீப் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள். அஷ்ஷேஹ் அல்பானீ அவர்கள் இது ஹஸன் எனும் தரத்திலுள்ளதாகக் கூறியுள்ளார்கள்.

**ஹதீஸ் அறிவிப்பாளர்:**

அபூ பக்ரா நுபைஃ பின் ஹாரிஸ் அஸ்ஸகஃபீ என்பவர் சிறந்த நபித்தோழர்களில் ஒருவர். ஸஹாபாக்களின் காலத்தில் இடம்பெற்ற குழப்ப சூழ்நிலைகளில் இருந்து ஒதுங்கி இருந்தார்கள். இவர் அறிவித்த நபிமொழிகள் 132. இவர் பஸராவிலே வசித்து அங்கேயே ஹி 50ல் மரணித்தார்கள். (இதில்) வேறு கருத்துக்களும் கூறப்பட்டுள்ளன.

**ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) அல்லாஹ் எமக்குச் செய்த அருட்கொடைகள் உபகாரங்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துவதற்காக ஸுஜூது செய்வது ஸுன்னாவென்பதை இந்நபிமொழி அறிவிக்கின்றது.

(2) ஸஜ்தா ஷுக்ரு (நன்றிக்கான ஸுஜூது) அல்லாஹ்வுக்கு மாத்திரமே (செலுத்தப்படல் வேண்டும்). அதன் காரணம் ஒரு அருட்கொடை கிடைத்தல் அல்லது ஒரு விபரீதம் தட்டப்படல்.

٧٠- عَنْ أَبِيْ هُرَيْرَةَ ﷺ قَالَ: سَمِعْتُ رَسُوْلَ اللّٰهِ ﷺ يَقُوْلُ: "وَاللّٰهِ إِنِّيْ لَأَسْتَغْفِرُ اللّٰهَ وَأَتُوْبُ إِلَيْهِ فِي الْيَوْمِ، أَكْثَرَ مِنْ سَبْعِيْنَ مَرَّةً".

(صحيح البخاري، رقم الحديث ٦٣٠٧).

(70) நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : அல்லாஹ்வின் மீது சத்தியமாக, நிச்சயமாக நான் தினமும் 70 தடவைகளுக்கும் மேல் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்டு அவனிடம் மீளுகிறேன்.

அறிவிப்பவர் : அபூ ஹு ரைரா (ரலி).

ஆதாரம் : புஹாரி 6307.

**☞ஹதீஸிலிருந்து பெறப்பட்ட பாடங்கள்:**

(1) அதிகம் பாவமன்னிப்புத் தேடி மீள்வதை இந்நபிமொழி தூண்டுகிறது.

(2) இஸ்லாமிய வாழ்கையின் அனைத்து அம்சங்களிலும் நபி (ஸல்) அவர்களை முன்மாதிரியாக எடுத்து அவரைப் பின்பற்ற ஆர்வமாயிருப்பது முஸ்லிமுக்கு அவசியமாகும்.

(3) பாவமனினிப்புத் தேடுவதால் பல நற்பயன்கள் கிடைக்கின்றன. பாவங்கள் மன்னிக்கப் படுவது, குறைகள் மறைக்கப்படுவது, அபிவிருத்தி

உண்டாகுதல், அல்லாஹ்வுடைய பொருத்தத்தை அடைந்து அவனிடம் நெருங்குதல், சுவனம் நுழைதல் போன்றன அவற்றில் சிலவாகும்.

அனைத்து நல்லறங்களும் எவனுடைய அருட்கொடையால் பூரணமடைகின்றதோ அந்த வல்ல அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும். நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் கிளையார்கள், தோழர்கள், மறுமை வரை அவர்களின் வழியில் சென்ற அனைவர் மீதும் அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.